Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 26 செவ்வாய்க்கிழமை (10.03.2015) | பக்கங்கள் 20 | ஓசை - 161

# ஆசிரியர்கள் முற்றுகை

## பணிந்தது மாகாண கல்வி அமைச்சு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் ஆசிரியர்கள் ஒன்றுதிரண்டு முற்றுகைப் போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

மாகாண கல்வி அமைச்சினால் ஏற்கனவே பணிக்கப்பட்டமைக்கு அமைவாக கஷ்டப் பிரதேசங்களில் போதிய சேவைக் காலத்தை பூர்த்திசெய்த ஆசிரியர்களே நேற்று இந்தப் போராட்டத்தில் குதித்தனர்.

நேற்றுக் காலை 8.00 மணியளவில் கல்வி அமைச்சின் அலுவலகத்திற்குச் சென்று ஆசிரியர்கள் தம்முடைய இடமாற்றத்தை உடனடியாக வழங்குமாறு கோரி அலுவலகத்திற்கு முன்பாக நீண்ட நேரம் காத்துநின்றனர்.

சுமார் ஐந்து மணித்தியாலங்கள் ஆசிரியர்களை சந்திப்பதற்கு யாரும் முன்வராத காரணத்தினால் விரக்தியடைந்த ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் அலுவலகத்தின் பிரதான வாயிலை வழிமறித்து பூட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆசிரியர்கள் ஆசிரிய இடமாற்றச் சபையின் நிபந்தனைக்கேற்ப ஆறு வருடங்களுக்கு மேலாக குறித்த வலயங்களில் கடமையாற்றிய போதிலும் ஆறு வருடங்களுக்கு மேலாகியும் இடமாற்றம் கிடைக்கப் பெறாத

19 ஆம் பக்கம் பார்க்க

## கோத்தா வெளியேறத் தடை

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, கடற்படை முன்னாள் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க உட்பட நால்வர் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. காலி நீதவான் நீதிமன்று இந்த தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவு நேற்று முற்பகல் 10.33 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். காலி துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டிருந்த 'அவன்காட்' தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் மிதக்கும் ஆயுத களஞ்சிய சாலை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் இரகசிய பொலிஸார் விடுத்த

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய முதலீடுகள் மும்மடங்காக அதிகரிப்பு

### குறியாய் இருக்கிறார் மோடி

(கொழும்பு)

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி தனது இலங்கை விஜயத்தின் போது முதலீடுகளை மும்மடங்காக அதிகரிப்பது மக்கள் மத்தியிலான தொடர்பை விஸ்தரிப்பது, இரு நாடுகள் மத்தியிலான போக்குவரத்தை சுலபமாக்குவது போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவார் என இந்திய வெளிவிவகார செயலாளர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

28 வருடங்களின் பின்னர் பிரதமர் மேற்கொள்கின்ற இந்த விஜயம் ஒரு இருதரப்பு விஜயமாகும், நாங்கள் பரந்துபட்ட குறிப்பிடத்தக்க உறவுகளைக் கொண்டுள்ளோம், நாங்கள் மக்கள் மத்தியிலான உறவுகளை விஸ்தரிக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## தடையை நீக்க வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து மீன்களையும் மீன் உற்பத்திகளையும் மீண்டும் இறக்குமதி செய்யும் முடிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வருவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

இலங்கை மீன்களை இறக்குமதி செய்ய விதிக்கப்பட்ட தடையை விரைவில் ஐரோப்பிய ஒன்றியம் நீக்கும் என ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை மூலமாகக் கொண்டு செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச

19 ஆம் பக்கம் பார்க்க

## மாந்தையில் மீள்குடியமர தற்காலிக தடை

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் மாந்தை பகுதியில் எதிர்வரும் 25ஆம் திகதிவரை மக்களை மீள்குடியேற வேண்டாம் என்று புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருக்கேதீஸ்வரம், மாந்தை பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த மக்கள் அவர்களது சொந்தக் காணிகளை துப்புரவு செய்து குடியேற நேற்று முன்தினம் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது அந்த மக்களை குடியேறவேண்டாம் என்று பொலிஸார் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

தமது பூர்வீக காணிகளே அவை என்று மக்கள் தெரிவித்த போதும், குறித்த காணிகள் புதைபொருள் ஆராய்ச்சித் திணைக் களத்துக்குரியவை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரிகள் நேற்று குறித்த இடத்துக்கு வந்து பார்வையிட்டதுடன், மக்களுடன் கலந்துரையாடி எதிர்வரும் 25 ஆம் திகதிவரை அப் பகுதியில் குடியேற்றம் தொடர்பான வேலைகள்ளை

19 ஆம் பக்கம் பார்க்க

# மைத்திரியை எதிர்க்க வேண்டாம்



(கொழும்பு)

தற்போதைய ஜனாதிபதி மைத திரிபால சிறிசேனவை எதிர்க்க வேண்டாம் என்றும், அவர் வெளி நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது அந்நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் அவருக்கு எதிராக போர்க்கொடி தூக்க வேண்டாம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்து 2 மாதகாலத்திற்குள்


19 ஆம் பக்கம் பார்க்க

## பொன்சேகாவின் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

தனது நாடாளுமன்ற உறுப்புரிமையை மீளப் பெற்றுத்தருமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை நிறைவடையும் வரையில் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கும் வகையில், இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகா தாக்கல் செய்த கோரிக்கை, மேன்முறையீட்டு

19 ஆம் பக்கம் பார்க்க



மோதவிடும் கலையில் வல்லவர்...?

7 ஆம் பக்கத்தில்




# ஜெயபுரம் போன்ற பின்தங்கிய பிரதேசங்கள் புறக்கணிப்பை சுமந்தே காணப்படுகின்றன

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஜெயபுரம் உள்ளிட்ட பல பிரதேசங்கள் யுதத்தால் மட்டுமல்ல திட்டமிடப்பட்ட புறக்கணிப்புகளின் பாதிப்புக்களையும் சுமந்த பிரதேசங்களாகவே, கடந்த காலத்தில் காணப்பட்டுள்ளது. எனவேதான் மீள்குடியேற்றத்தின் பின்னர் நாம் இந்த பிரதேசங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



நேற்று பூநகரி, ஜெயபுரம் தெற்கு கதிர் முன்பள்ளிக்கு றகமா நிறுவனத்தினரால் 35 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடத்தினையும், நாடாளுமன்ற உறுப்பினரின் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு முற்றத்தினையும் மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

ஜெயபுரம் பிரதேசம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகிறது மீள்குடியேற்றத்தின் ஆரம்ப காலத்தில் இங்கு எதுவுமே காணப்படவில்லை ஆனால் இன்று அந்த நிலைமையில் பார்ரியளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் இன்னும் மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படுவதற்கான தேவைகள் அதிகம் உண்டு. ஏற்படுத்தபட்டுள்ள மாற்றத்திற்கு பின்னால் கோடிக் கணக்கான நிதியும்,கடின உழைப்பும் காணப்படுகிறது.

யுத்தத்தின் பாதிப்புக்களை சுமந்த எல்லா பிரதேசங்களிலும் இவ்வாறான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறிவிட முடியாது ஆனால் ஜெயபுரத்தில் இந்த ஐந்து வருடத்திற்குள் வாழ்வாதாரத்திலும், பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம். இதற்காக நாம் அதிக அக்கறை எடுத்துள்ளோம். பெ்ருமளவு நிதியைச் செலவு செய்திருக்கினறோம் பல அரசசார்பற்ற நிறுவனங்களை இந்த பிரதேசங்களை நோக்கி திசை திருப்பியுள்ளோம் இதன் விளைவுதான் இந்த முன்னேற்றம். ஆனாலும் இன்னும் ஏராளமான அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை கூட நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது எங்களது மக்கள் ஒரு மணித்தியால மேனும் அபிவிருத்தியிலிருந்து விலகி நிற்க முடியாது தொடர்ந்தும் அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தேன் என்றார்.

ஜெயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் இராஜரட்ணம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன்,ஜெயபுரம் மகா வித்தியாலய அதிபர் நா.நடேசமூர்த்தி, கிராம அலுவலர் மகாபரன், றகமா நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி சந்திரபோஸ், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஜெயபுரம் பிரதேச இணைப்பாளர் றோஜஸ மற்றும் கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள்,முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அச்சுவேலி மயானத்திற்கு அருகில் கொல் களம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேசசபை பிரிவிலுள்ள மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களின் பயன்பாட்டிற்கு வசதியாக 17 இலட்சம் ரூபா செலவில் அச்சுவேலி வடக்கு மயானத்துக்கு அருகில் உள்ள கொல் களத்தை புனரமைப்பதற்கான ஏற்பாடுகளை வலி. கிழக்கு பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது என தவிசாளர் தெரிவித்தார்.

அச்சுவேலி வடக்கு மயானத்துக்கு அருகில் அமைந்திருந்த கொல்களம் உரிய நடைமுறை விதிகளுக்கு அமைய நிர்மாணிக்கப்படவில்லை. சுகாதார விதிகளுக்கு அமைய பராமரிக்கப்படவில்லை என்பதால் சுகாதாரப் பகுதியால் பயன்பாட்டிற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது.

கடந்த இரண்டு வருடங்கள் வரையில் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டிருந்த கொல்களத்தை மீண்டும் பயன் பாட்டிற்குஏற்ற வகையில் 17 இலட்சம் ரூபா செலவில் திருத் தியமைப்பதற்கான ஏற்பாடுகளை வலி. கிழக்கு பிரதேச சபை மேற்கொண்டு வருகிறது என்றார். (63)

# முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப். பயிற்சியும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள பருத்தித்துறை ஜே. 401 (சுப்பர் மடம்) கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளிற்கிணங்க முன்னெச்சரிக்கை வழிப்புணர்வு ஒத்திகைப் பயிற்சி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். இது தொடர்பில் பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதும்களுக்கு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

# காந்தி சேவா சங்கத்தின் புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன்போது சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக தி. இராசநாயகம், பொதுச் செயலாளராக எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி, உப தலைவர்களாக பேராசிரியர் மா. சின்னத்தம்பி, ந. சிவகரன், பொருளாளராக மா. லீலாவிநோதன் ஆகியோரும் சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகராக சோ. க. தம்பிப்பிள்ளையும் தெரிவாகினர்.

சங்கத்தின் கீழ் இயங்கும் கிளிநொச்சி சிறுவர் இல்லக் (காந்தி நிலையம் - உருத்திரபுரம்) குழுவுக்கு தி. இராசநாயகம் (தலைவர்), ப. சதானந்தன் (செயலாளர்), மா. லீலாவிநோதன் (பொருளாளர்), கா. கார்த்திகேசு, செல்வராணி சோமசேகரம்பிள்ளை, து. இரத்தினசிங்கம், தே. சுபாகரன், செ. கோபிதர்சன், ப. சபாரத்தினம், த. நேசராஜ்குமார், இரா. செல்வராசா, த. தேவராசா, க. பிரமதீஸ்வரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காந்தியக் கல்விக் குழுவுக்குத் தலைவராக பேராசிரியர் மா. சின்னத்தம்பியும், உறுப்பினர்களாக பேராசிரியர் சு. மோகனதாஸ், ந. சிவகரன், க. செல்வக்குமாரன், எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# மாற்றுத் திறனாளிகள் சங்கமூடாக உதவிகளை வழங்கக் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவியமைப்புகள் வழங்கும் உதவிகளை முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சங்கமூடாக வழங்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சங்கத்தலைவி சதாசிவம் சகீலா தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விபரங்கள் அனைத்தும் எமது சங்கத்திடமுள்ளன. உதவிகளை உதவியமைப்புகள் தன்னிச்சையாக வழங்குவதன் காரணமாக பல முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றன. இதனைத் தவிர்ப்பதற்கு எமது சங்கமூடாக மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகளை உதவியமைப்புகள் வழங்குவதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் சிறந்தமுறையில் உதவிகளைப் பெற்றுக்கொள்ளமுடியுமெனவும் தெரிவித்தார். (160)

# திறக்கப்பட்ட அன்றே மூடப்பட்ட வெதுப்பகம்

(வவுனியா)

வவுனியா, பிரமனாலங்குளம் பகுதியில் வடமாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் திறக்கப்பட்ட பேக்கரி அன்றைய தினமே மூடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின், வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் 1.5 மில்லியன் ரூபா செலவில் வவுனியா, செட்டிகுளம், பிரமணாலங்குளம் பகுதியில் பேக்கரி ஒன்று அமைக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

திறக்கப்பட்ட பேக்கரி அன்று மாலை முதலே மூடப்பட்டுள்ளது.

திறப்பதற்காக மட்டுமே பேக்கரியில் ஒருநாள் உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெற்றது. இது தொடர்பில் அப்பகுதி மக்களை கேட்ட போது, இக் கிராமத்தைச் சோந்த 5 பேருக்கு வெதுப்பகம் தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அவர்கள் தற்போது இங்கு தான் உள்ளார்கள். ஆனால் இந்த பேக்கரியை 5 பேரிடமும் கொடுப்பதா அல்லது எவ்வாறு யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் நடத்தி வருமானத்தைப் பெறுவது என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை. இதன் காரணமாகவே பேக்கரி மூடப்பட்டுள்ளது. திட்டமிடப்படாத நடவடிக்கையே இதற்குக் காரணம் என மக்கள் தெரிவிக்கின்றனர்

# உதவி வழங்குவதாக உறுதி

(வவுனியா)

வவுனியா பம்பைமடுவில் நேற்று காலை 11 மணியளவில் கற்பகபுரம், அரபா நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிராம அபிவிருத்தி மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களை சந்தித்து வடமாகாண அமைச்சர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வவுனியா பிரதேச செயலாளர் அக்கிராமங்களை சேர்ந்த கிராம சேவகர்களும் கலந்து கொண்டனர். இவ் விசேட மக்கள் சந்திப்பின் போது கற்பகபுரம் கிராமத் துக்கு வீதி புனரமைப்பிற்கு 2 மில்லியன் ரூபாவும் அரபா நகருக்கு 2 மில்லியன் ரூபாவுமாக வீதி அபி விருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் மக்களுக்கு உறுதியுரை வழங்கப்பட்டது. (160)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப்பாடல்கள்) |
| Am 07.00 | காலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# பட்டதாரிக்குரிய பட்டங்களை வழங்குவதற்கு சங்கீத சபை திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும்

## யாழ்.பல்கலையின் முன்னாள் துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீதசபையானது எதிர்காலத்தில் பட்டதாரிக்குரிய பட்டங்களை வழங்குவதற்குரிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

வடஇலங்கை சங்கீத சபையின் 19 ஆவது "கலாவித்தகர்" பட்டமளிப்பு விழா (2015) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மருதனார் மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபையின் தற்பானந்தன் கலையரங்கில் நடைபெற்றது.

வடஇலங்கை சங்கீத சபைத் தலைவரும் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளருமான செ.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இச் செயற்பாட்டினை வட மாகாண சங்கீத சபையின் முழு நிதியுடன் செயற்படுத்த முடியும். 1931 ஆம் ஆண்டிலிருந்து கல்விக்கந்தோரின் வளர்ச்சியிலேயே இச்சபை செயற்பட்டு வருகிறது. எந்த ஒரு கருத்தையும் நாம் முன்மொழியும் போது மக்கள் சிரிக்கத்தான் செய்வார்கள் பின்னாளில் நாம் முன்னெடுக்கும் காரியம் வெற்றியளிக்கும் போது எல்லோரும் ஒத்துழைப்பார்கள் இது உலக நியதி யாழ்.நுண்கலைக்கழகமானது யாழ்இராமநாதன் அக்கடமி என்று தான் முன்னர் இருந்தது. அதனை நாம் விரும்பவில்லை. யாழ். நுண்கலைக்கழகம் என்று பெயர் மாற்றினோம். யாழ்.பல்கலைக்கழக கட்டமைப்பிலேயே இக் கலைத்துறை இருக்க வேண்டும் என்று விரும்பி அதனை மாற்றியிருந்தோம். அதேபோல் வட இலங்கை சங்கீத சபையானது ஏன் ஒரு பெரிய பட்டதாரிகளை உருவாக்கும் நிறுவனமாக வளரக் கூடாது. மாற்ற முடியும். அதற்கான சரியான திட்டங்கள் இருக்கும் என்றால் எதனையும் சாத்தியமாக்க முடியும்.

உலகளாவிய ரீதியில் பரீட்சைகளையும் சிறந்த கல்வியையும் வழங்குகின்ற ஒரேயொரு நிறுவனம் இலங்கையில் இது என்றுதான் கூற முடியும். நாடு கடந்து இச்சபையானது சிறந்த கல்வியை வழங்கி வருகிறது. வெளிநாடுகளுக்குச் சென்று பரீட்சைகளை கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரன் வழங்கி வருகிறார். வடமாகாணசபை உருவாக்கப்பட்டு விட்டது. எமது வடமாகாணக் கல்வி முழுவதற்கும் இச்சபையே பொறுப்பாகும். அதேபோல் இம் மாகாண சபைக்கு யாழ்.பல்கலையை சிறந்த முறையில் நடத்திச் செல்வதற்கு உரிமையுள்ளது.

இங்கு கல்வி கற்று சிறந்த பட்டத்தைப் பெற்றுக் கொள்ளுகிறீர்கள். நடனம், சித்திரம், நாடகம் போன்ற கலைத்துறைகளில் கல்வி கற்ற பட்டதாரிகளாக வெளியேறும் பட்டதாரிகள் பெரும்பாலும் அரச நிறுவனங்களையே எதிர்பார்க்கின்றார்கள். நீங்கள் வீட்டிலேயே மாணவர்களுக்கு பாடங்களைக் கற்பித்து சம்பாதித்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். எதிர்காலம் உங்களுக்குச் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள் என்றார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பாலசுந்தரம் பிள்ளை, சிறப்பு விருந்தினராக யாழ்.இராமநாதன் நுண்கலை கழகத்தின் ஓய்வுநிலை நடனத் துறைத் தலைவர் கலாநிதி கிருஷாந்தி ரவீந்திரா, கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத்துறைத் தலைவர் சுகந்தி ஸ்ரீமுரளிதரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (63)

# வளலாய் பாடசாலையை மீள இயங்கவைக்க முயற்சி


வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையை 20 வருடங்களின் பின்னர் மீளவும் செயற்பட வைப்பதற்கான முன் முயற்சிகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இந்த வகையில் வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் இணைந்து கற்பதற்கு விரும்பும் மாணவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. அச்சுவேலி மத்திய கல்லூரியில் பதிவுகளை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் பகுதியில் நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்விக் கட்டமைப்பில் மூத்த நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை 1882 ஆம் ஆண்டு அமெரிக்கன் மிஷனரியால் ஸ்தாபிக்கப்பட்டது. வளர்ச்சி அடைந்த காலப்பகுதியில் 500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். க.பொ.த சாதாரண தரம் வரையான வகுப்புக்களுடன் செயற்பட்டது. வளலாய் இடம் பெயர்வை அடுத்து இடம் பெயர் நிலையில் செயற்பட்டு வந்த போதிலும் 1995 ஆம் ஆண்டு அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. வளலாய் மீள்குடியேற்றத்துடன் பாடசாலையையும் மீள ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வந்தது.

இதனை கொள்கை அளவில் கல்வித் திணைக்களம் ஏற்றுக் கொண்ட போதிலும் நடை முறைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை என பெற்றோர் கவலை தெரிவித்து வந்தனர். பாடசாலை மூடப்பட்டு 20 வருடங்களின் பின்னர் மீளத் திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (63,85)

# விலங்குகள், கொடிய பாம்புகளின் தொல்லையை வீதிகளில் எதிர் கொள்ளும் அக்கராயன் மக்கள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன்குளம் கிராமத்துக்கான முதன்மை வீதிகளுக்கருகில் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதால் இடர்களை எதிர் கொண்டு வரும் மக்கள் சிறு காட்டு விலங்குகள் மற்றும் கொடியபாம்புகளின் தொல்லைகளை நாள்தோறும் வீதிகளில் எதிர் கொண்டுவருகின்றனர்.

மீள்குடியேற்றம் நடைபெற்ற தொடக்கக் காலங்களில் உதவியமைப்புகளின் உதவியுடன் வீதிகளுக்கருகிலான இருபுற பற்றைகளும் துப்புரவு செய்யப்பட்ட நிலையில் தற்போது நீண்ட காலமாக வீதிகளுக்கருகிலான பற்றைகள் துப்புரவாக்கப்படாததன் காரணமாக பற்றைகள் செழித்துவளர்ந்து காணப்படுகின்றன. இதன்காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் உபநகரங்களில் ஒன்றான அக்கராயன் குளத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் போக்குவரத்து செய்வதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். (160)

## தெளிவூட்டல் நிகழ்வு

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்மாவட்ட சம்மேளனத்தினால் நாளை முற்பகல் 10 மணிக்கு "2015 ஆம் ஆண்டு இளைஞர் கழக தெளிவூட்டல்" தொடர்பான நிகழ்வு பத்திரிகையாளர்களுக்கு யாழ்ப்பாணம் கச்சேரிகிழக்கு ஒழுங்கையில் இயங்கிவரும் மாவட்டக் காரியாலயத்தில் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்களும் உணர்ச்சி அரசியலும்

## யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகை அறிக்கை

தமிழர் அரசியலிலும், அரசியல் போராட்டங்களிலும், முதிர்ச்சியும் இராசதந்திரமும் தேவைப்படுவதாக நாம் உணர்கின்றோம். உணர்ச்சி ஊட்டும் அரசியலினால் நாம் அடைந்த பலன்களை கடந்த கால வரலாறு எமக்குக் காட்டி நிற்கின்றது. அந்த வரலாற்றிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ளாது மீண்டும் அநாவசிய உணர்ச்சியூட்டும் அரசியல் செய்வது சிலரின் தனிப்பட்ட நலன்களிற்கு உதவினாலும் எமது மக்களுக்கு நன்மை பயக்கப்போவதில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற அரசியல் நடவடிக்கைகள் எமக்குக் கவலையை அளிக்கின்றன. கருத்து வேறுபாடுகளை தர்க்க ரீதியில் மக்கள் முன்கொண்டு செல்லாமல் கொடும்பாவி எரிப்பதும் துரோகிகள் என அடையாளம் இடுவதும் உணர்ச்சி அரசியலின் வடிவங்களே. தமிழர்களின் உரிமைப்பிரச்சினைக்கான தீர்வை ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சமாதானமாகவும் சமஉரிமையுடனும் வாழ்வது என்ற ரீதியில் அணுகுதலே புத்திசாலித்தனமானது.

கடந்த அரசாங்கம் பதவியில் இருந்திருப்பின் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை உள்நாட்டில் முற்றாகவே நிராகரிக்கப்பட்டிருக்கும். தற்போதைய அரசாங்கம் மேற்படி அறிக்கையின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கானதொரு உள்நாட்டுப்பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என நாம் கருதுகின்றோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்குழுவின் ஆணையாளர் இளவரசர் ஹீசைன் ஐ.நாவின் அறிக்கை பிற்போடுகை ஒரு தடவை மட்டுமே எனவும் செப்ரெம்பர் மாதத்தில் அறிக்கை நிச்சயமாக வெளிவரும் எனவும் உறுதியளித்துள்ளார். இந்நிலையில் நாம் நீதிக்கு அளிக்கப்பட வேண்டிய மரியாதையுடன் சற்றுக்காத்திருப்பது கௌரவமானதும் பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளிற்கு அளிக்கப்படும் மதிப்புமாகும்.

தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் பெருமளவில் வாக்களித்து தற்போதைய ஜனாதிபதியினைத் தெரிவு செய்துள்ளனர். அவர்களது நியாயமான கோரிக்கைகள் காலதாமதமின்றிப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். பெருமளவிலான மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களது மீள்குடியேற்றம் விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வுகளை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளும் காலதாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இதற்கு திறந்த மனத்துடன் நடுநிலையாக எமது கடந்தகால அரசியலை ஆய்வு செய்வதுடன் ஜனநாயக வழிமுறைகளை வலுவுடையதாக்கி, எல்லா சமூகங்களினதும் இணைப்பை உருவாக்குவதும் பிரதானமாகும். தமிழ் மக்களின் பிரச்சினையில் அனுதாபம் கொண்டிருக்கும் சிங்கள மக்களுடன் சேர்ந்து இயங்கி சாதாரண சிங்கள மக்களுக்கு உள்ள பயங்களை நீக்குவதற்கு தமிழ்த் தலைவர்கள் முன்வரவேண்டும்.

மாறாக இன ரீதியிலான தீவிரவாதமான செயற்பாடுகள் சிங்கள மக்களிடையேயுள்ள இனவாத தீவிரவாத சக்திகளிற்கு வலுவூட்டுவதாக மட்டுமே அமையும். இச் செயற்பாடுகள் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கிடையிலான இடைவெளியை அதிகரித்து இனப்பிரச்சினைக்கான தீர்வை மேலும் தாமதப்படுத்தும்.



உடைமையில் உரிமை கோருவது அல்ல அன்பு. உன்னையே காணிக்கையாகத் தருவதுதான் அன்பு கொள்வதன் பொருளாகும் - ஸ்ரீஅன்னை.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பொம்மைகள் செய்யும் உதவி!

இன்னும் சில வருடங்களில், உலக மக்கள் தொகையில் 60 வீதமானோர் பெருநகரங்களில் வசிப்பவர்களாக இருப்பார்கள் என்கிறது ஓர் ஆய்வு. கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்கள் நோக்கி இடம்பெயர்ந்து கொண்டிருப்பது கண்கூடு.

இதற்குப் பல காரணங்கள். வேலை கிடைத்துச் செல்லுதல், படிப்புக்காக, பொருளாதார வாய்ப்புகளிற்காக, பிழைத்துக்கொள்ள, நவீன உலகத் தொடர்புக்காக எனப் பல்வேறு காரணங்களினால் இந்தப் பெருநகர்சேர்தல் நடைபெறுகிறது.

நாம் சென்றுசேரும் நகரங்கள் நம்மிட்மிருந்து முதலில் பறிப்பது நம்முடைய கூட்டு வாழ்க்கையைத்தான். பெருநகரின் பரபரப்பான இயக்கத்தில் அங்கு எல்லோரும் தனியர்கள்தான். இதனால் அதிகம் பாதிக்கப்படுவது குழந்தைகள்.

அம்மா, அப்பா இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம். வீட்டில் பெரியவர்களில்லாத தனிக்குடும்பமுறை எல்லாம் குழந்தைகளைத் தனிமைப்படுத்துகிறது. அம்மா, அப்பாவின் அரவணைப்பு முழுநேரமும் கிட்டுவதில்லை.

இதனால் அன்புக்கு ஏங்குபவர்களாகவே குழந்தைகள் வளர நேர்கிறது. மனிதர்களுக்கு அன்பு தேவைப்படுகிறது. அன்பு கிடைக்கவில்லை என்றால் மனிதர்கள் எரிச்சல் அடைகிறார்கள். கோபப்படுகிறார்கள். குழந்தைகளை இது அதிகம் பாதிக்கிறது.

கையில் கிடைத்ததை எல்லாம் தூக்கி அடித்து, வீசி எறிந்து உடைத்து நொறுக்கும் குழந்தைகள் ஒருவித மனநோயுடனே வளர்கிறார்கள் என்கிறார்கள் இன்றைய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

இந்தக் குழந்தைகளைக் குணப்படுத்த பொம்மைகளே உதவுவதாகக் கூறுகிறார்கள். குழந்தைகள் விளையாடுவதற்காகப் பொம்மைகளை அவர்களிடம் கொடுப்போம். ஆனால் மனநோயைக் குணமாக்கவும் அந்த பொம்மைகள் அவர்களுக்கு உதவுகின்றன என்கிறார்கள் இந்த மருத்துவர்கள்.

பொம்மைகளை அவர்களிடம் கொடுத்தால், அமைதியாகிறார்கள். பொம்மைகளுடன் அவர்கள் கொஞ்சுகிறார்கள். விளையாடுகிறார்கள். பொம்மைகளைக் கட்டிப் பிடித்துத் தூங்குகிறார்கள். குழந்தைகளுக்கு மட்டுமல்ல், வயதானவர்களுக்கும் கூட இந்த பொம்மை மருத்துவம் பயன்படுகிறது என்கிறார்கள்.

பெரியவர்களுக்கும், அவர்களுக்குள்ள மனக்குறைபாடுகளுக்கு ஏற்ப – பொருத்தமான பொம்மைகளைக் கொடுத்து அவர்களுடைய மனநோய்களைக் குணப்படுத்த முடியும்.

இது மருந்தில்லா மருத்துவம். மனநோய்களுக்குத் தரப்படும் மருந்துகள் பெரும்பாலானவை மயக்கத்தைத் தரக்கூடியவை. நோயாளியை அமைதிப்படுத்த அதைத் தருகிறார்கள். மருந்துகளைத் தந்ததும் நோயாளியின் நரம்புகள் தளர்ந்து விடுகின்றன.

மருந்தின் வேகம் குறைந்தவுடன் மீண்டும் நோயாளி பதற்றமாகிகத்த ஆரம்பித்துவிடுவார். மீண்டும் அவரை அமைதிப்படுத்த மருந்து கொடுப்பார்கள். இப்படி பல தடவைகள் மருந்து கொடுப்பதால், நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு, உடலில் பல நோய்கள் ஏற்பட்டுவிட வாய்ப்புண்டு. ஓமோன்கள் பாதிக்கப்பட்டு உடல் இயக்கமே சீரற்றுப் போய்விடும்.

இப்படி மருந்துகளால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கவே ஆழ்மன மருத்துவத்தை மருத்துவர்கள் சிபார்சு செய்கிறார்கள். பொம்மைகளுடன் விளையாடுவதன் மூலம் உளநெருக்கீடுகளிலிருந்து விடுதலை பிறக்கிறது.

சில குழந்தைகள் படிப்பில் மந்தமாக இருப்பார்கள். மக்கு என்று எல்லாரும் அவர்களைக் கிண்டல் செய்வார்கள். பெற்றோரோ அக்குழந்தைகளைப் “படி... படி’ என்று வற்புறுத்திக் கொண்டே இருப்பார்கள். ஆனால் அந்தக் குழந்தைகள் படிப்பில் முன்னேற்றமின்றியே இருப்பார்கள்.

அப்படிப்பட்ட குழந்தைகளின் ஆழ்மனதை அணுகி, “நான் நன்றாகப் படிப்பேன். நான் படிப்பில் திறமையானவன்’ என்பன போன்ற எண்ணங்களை அவர்களுடைய மனதில் ஆழமாகப் பதித்துவிட்டால், அதற்குப் பிறகு, யாரும் சொல்லாமலேயே அவர்கள் நன்றாகப் படிக்க ஆரம்பித்துவிடுவார்கள் என்கிறார்கள் இந்த மருத்துவர்கள்.

- ஆசிரியர்

# ஜனாதிபதி நாடுதிரும்பியதும்

# இரு பிரதான கட்சிகளுடன் பேச்சு

(கொழும்பு)

வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்பு மாற்றங்கள் தொடர்பாக இணக்கப்பாட்டை எட்டுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

பிரிட்டனிற்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு 12 ஆம் திகதி நாடு திரும்பவுள்ள ஜனாதிபதி இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் விஜயத்தின் பின்னர் இரு பிரதான கட்சிகளையும் சந்திக்கவுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேர்தல் சீர்திருத்தங்களும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கத்தையும் ஒன்றாக முன்னெடுக்கவேண்டும் என வலியுறுத்துவதாகவும், ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு எதிர்மாறான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக நீக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி விரும்புவதாகவும், அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதியின் அதிகாரங்கள் சிலவற்றை பிரதமர் தலைமையிலான நாடாளுமன்றத்திற்கு கையளிக்கவேண்டும் என கருதுவதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி இரு கட்சிகளையும் சந்தித்து இணக்கப்பாடொன்றிற்கு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளார். தேர்தல் பிரசாரத்தின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் அரசமைப்பு மாற்றங்கள் முக்கியமானவை என்பதும் அரசாங்கத்தின் 100 நாள் திட்டத்தில் அது இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ஊழல்மோசடி தொடர்பாக 2000 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இலங்கையர்களால் சுவிஸிலும் சவுதி அராபியாவிலும் வைப்புச் செய்யப்பட்டுள்ள இரகசிய கறுப்புப் பணம் தொடர்பில் தகவல்கள் தருமாறு கோரப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மத்தல விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் நுரைச்சோலை அனல் மின்சார மையம் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட பணம் சிலரால் சுவிஸிலும் சவுதியிலும் வைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை முன்னைய அரசாங்கத்தின் மீது ஊழல்கள் தொடர்பில் சுமார் 2000 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இன்னும் 6 மாதங்களுக்குள் முன்னைய அரசாங்கத்தில் மோசடி செய்த முக்கியமானவர்களின் விபரங்கள் வெளியிடப்படும் என்றும் சேனசிங்க தெரிவித்துள்ளார்.

# கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கு வடமாகாணத்தில் விடுதிகள்

வடமாகாணத்திலுள்ள கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கு விடுதிகள் அமைப்பதற்காக இந்த வருடம் 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைகள பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

வடமாகாணத்தில் வருடாந்தம் கால்நடை வைத்தியர்களுக்குரிய விடுதிகள் அமைக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் 4 விடுதிகளும், கிளிநொச்சியில் 2 விடுதிகளும், முல்லைத்தீவில் 3 விடுதிகளும், வவுனியாவில் 3 விடுதிகளும், மன்னாரில் 2 விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் பச்சிலைப்பள்ளி, வவுனியா தெற்கு, மடு மற்றும் கிளிநொச்சி அறிவியல் நகர் ஆகிய இடங்களில் தலா ஒரு விடுதி அமைக்கவுள்ளோம்.

வடமாகாணத்தில் 43 கால்நடை வைத்திய அதிகாரிகள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் விடுதிகள் அமைக்கப்பட வேண்டியது மிக அவசியம் என அவர் தெரிவித்தார்.

# சாதக காலநிலையை உருவாக்க வீதிமுறை பயிர்ச்செய்கை

விவசாய நிலங்களில் சூழல் வெப்பத்தை குறைத்து பயிர்களுக்கு சாதகமான காலநிலையை உருவாக்கும் நோக்குடன் வீதிமுறை பயிர்ச்செய்கையை விவசாயிகளிடையே அறிமுகப்படுத்த உள்ளதாக வடமாகாண விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

விவசாய நிலங்கள், தோட்டங்கள் என்பன வெட்டவெளியாகி இருப்பதால் சூழல் வெப்பம் அதிகரித்துள்ளது. இதனால் பயிர்களுக்கு சாதகமற்ற காலநிலை உருவாகின்றது. அத்துடன், பயிர்களில் பீடை பெருக்கம் அதிகரித்துள்ளது. எனவே, பயிருக்கு சாதகமான காலநிலையை உருவாக்குவதற்கு தோட்டங்களில் 10 அடிக்கு ஒரு பகுதியில் வீதிமுறை பயிர்ச்செய்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

இதன்மூலம் பயிர் செழிப்புடன் வளர இலகுவான காலநிலை உருவாகும். மண்ணின் வளத்தை மேம்படுத்த உயிர்கரி, ஜீவாமிர்தம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தவுள்ளோம்.

உயிர்கள் ஜீவாமிர்தம் ஆகியவற்றை தயாரிப்பதற்கு உபகரணங்களை விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## முறிகள் விநியோக முறைகேடு விசாரணை

இலங்கை மத்திய வங்கியின் முறிகள் விநியோகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார். முறைகேடுகள் இடம்பெற்றமை விசாரணைகளின் போது உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# 85 வயதிலும் உழைத்து வாழும் 10 பிள்ளைகளின் தாய்

## மகளிர் தினத்தில் கௌரவிப்பு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் 85 வயதிலும் உழைத்து வாழும் பூபதி எனும் பெண்மணியை தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு கௌரவித்துள்ளது. வவுனியாவில் இருந்து நெளுக்குளம் ஊடாக செட்டிகுளம் செல்லும் வழியில் பாவற்குளம் பாடசாலைக்கு முன்பாக ஒரு சிறிய தேநீர்க்கடை நடத்தி வருபவரே கௌரவிக்கப்பட்டார். குருநாகலில் பிறந்து 1958 இல் வவுனியா பாவற்குளத்தில் குடியேறி சிவசுப்ரமணியம் என்பவரை மணந்த இவர் 10 பிள்ளைகளின் தாயாவார்.

3 பிள்ளைகள் ஐரோப்பிய நாடுகளிலும் மற்றைய பிள்ளைகள் சிறப்பாக வாழும் போதிலும், யாரின் கையையும் எதிர்பார்க்காமல் வாழ வேண்டும் என்ற வைராக்கியத்துடன் வாழும் இப் பெண்மணியை கௌரவிப்பதில் பெருமை கொள்வதாக இவ் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த நிகழ்வில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், உறுப்பினர் சர்மிலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஜேன் வயில்ட் மற்றும் ஸ்டீபன் ஹொக்கிங்

**எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் எல்லோருமே பெரும்பாலும் தன்முனைப்பு கொண்டவர்கள். தங்களைப் பற்றியே சிந்திப்பவர்கள். தங்களைப் பற்றி எண்ணும் போது அவர்களின் ஆக்கங்களையும் சேர்த்துதான். அதனால் அவர்களால் பெரும்பாலும் பிறரின் துயரத்தைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. அதனால்தான் அவர்களின் மனைவியும் பிள்ளைகளும் மிகுந்த மனச்சோர்வுக்கும் எரிச்சலுக்கும் உள்ளாகுகிறார்கள்.**

ஸ்டீபன் ஹொக்கிங் மற்றும் அவரது முன்னாள் மனைவி ஜேன் வயில்ட் பற்றிய ஒரு புனைவு சித்திரமே The Theory of Everything. இந்த திரைப்படம் ஜேன் எழுதிய சுய-சரிதையை அடிப்படையாகக் கொண்டது.

ஸ்டீபன் ஹொக்கிங் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது ஜேனை ஒரு விருந்தில் சந்திக்கிறார். கண்டதும் காதல். ஜேன் அதே பல்கலைக்கழகத்தில் இலக்கியம் படித்துக்கொண்டிருப்பார். ஸ்டீபன் காலத்தைப் பற்றி உயர் ஆராய்ச்சியை மேற்கொள்கிறார்.

அந்த காலகட்டத்தில்தான் அவர் கீழே விழும் பேனாவை எடுக்க சிரமப்படுகிறார். ரயிலைப் பிடிப்ப தற்காக படிக்கட்டில் ஏறும்போது தடுமாறுகிறார். ஒரு நாள் பல் கலைக்கழகத்திற்கு வேகமாக செல்லும் போது கீழே விழுகிறார். அவரை பரிசோதனை செய்யும் மருத்துவர் அவருக்கு இயக்க நரம்பியல் (Motor Neuron) ஒழுங்கின்மை இருப்பதாக சொல்லி அவர் இன்னும் இரண்டு வருடங்கள் தான் உயிரோடு இருப்பார் என்று சொல்கிறார்.

அவரது மூளைக்கு ஒரு பாதிப்பும் இல்லை என்றும் ஆனால் அவர் கொஞ்சம் கொஞ்சமாக நடப்பது, பேசுவது, உண்பது ஆகியவற்றை தன் விருப்பப்படி செய்ய இயலா மல் போகும் என்கிறார். ஸ்டீபன் அதன்பின் ஜேனை சந்திக்க மறுக் கிறார். ஆனால் ஜேன் ஸ்டீபனின் இயக்க நரம்பணு ஒழுங்கின் மையை பற்றி அறிந்தும் அவரை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்கிறார்.

ஸ்டீபனின் தந்தையும் ஜேனிடம் இது சரியான முடிவு அல்ல என்று சொல்கிறார். ஆனால் ஜேன் ஸ்டீபனை திருமணம் செய்து கொள்கிறார். ஸ்டீபன் தன் உயர் ஆராய்ச்சியை பரிசீலனை குழு விடம் சமர்ப்பிக்கிறார். அவருடைய கோட்பாட்டை குழுவினர் மிகவும் பாராட்டுகின்றனர். அவர் டாக்டர் ஸ்டீபன் ஹொக்கிங் ஆகிறார்.

அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கிறது. அடுத்ததாக ஒரு பெண் குழந்தை. ஸ்டீபன் Black holes குறித்து அளிக்கும் விரிவுரையைக் கவனிக்கும் சக இயற்பியலாளர்கள் அவரை மிகவும் பாராட்டுகிறார்கள். ஸ்டீபன் உலக அளவில் பலருக்கும் பரிச்சயமான இயற்பியலாளராக மாறுகிறார்.

ஒரு பக்கம் குழந்தைகள், மறுபக் கம் ஸ்டீபன் என்று ஜேன் மிகவும் எரிச்சலும் மனச்சோர்வும் அடை-கிறார். அவரால் தன் இலக்கிய ஆய்வில் கவனம் செலுத்த முடிய வில்லை. ஸ்டீபனுக்கு தடியை கொண்டு நடப்பது மிகவும் சிரம மாக மாற அவருக்கு ஜேன் முதலில் சாதாரண சக்கர நாற் காலியையும் பின்னாளில் மின் சக்கர நாற்காலியும் உபயோகப் படுத்தவும் பழக்கப்படுத்துகிறார்.

ஜேனின் மனச்சோர்வை புரிந்து கொள்ளும் அவரது அன்னை அவரை தேவாலயத்தில் ஒத்தி சைவு குழுவில் இணைந்து பாடச்சொல்கிறார். ஜேன் அதை ஏற்று தேவாலயம் சென்று குழு வில் இணைந்து பாடுகிறார். அங்கு அவருக்கு இசைக் கலைஞரான ஜோனதான் அறிமுகமாகிறார். அவர் ஜேனின் வீட்டுக்கு வந்து அவரது மகனுக்கு பியானோ சொல்லித்தருகிறார். ஜோனதான் ஸ்டீபனின் வீட்டு அங்கத்தினரா கிறார்.

ஸ்டீபன் தம்பதிகளுக்கு மூன் றாவது குழந்தை பிறக்கிறது. அப்போது ஜேனின் அன்னை இந்த குழந்தை ஜோனதானுக்கு பிறந்ததா அல்லது ஸ்டீபனுக்கு பிறந்ததா என்று கேட்கிறார். இத்தகைய கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத ஜேன் அதிர்ச்சி அடைகிறார். இந்த உரையாடலை கேட்டுவிடும் ஜோனதான் இனிதான் இங்கு வருவது சரியில்லை என்று சொல்லி விலகிச்செல்கிறார்.

ஸ்டீபன் ஜோனதானை தேவாலயத்தில் சந்தித்து அவர் வீட்டுக்கு வர வேண்டும் என்கிறார். இதற்கிடையில் ஒருமுறை ஸ்டீபன் வெளிநாட்டு பயணம் செல்லும் போது நுரையீரலழற்சியால் பாதிக்கப் படுகிறார். அப்போது அவருக்கு சிகிச்சை செய்தால் அவரால் பேசவே முடியாமல் போகும் என்னும் போது ஜேன் அவர் உயிருடன் இருப்பதே முக்கியம் என்கிறார்.

பின்னர் ஸ்டீபன் பேசுவதற்காக பேசும் இயந்திரம் அவரது சக்கர நாற்காலியில் பொருத்தப்படுகிறது. அந்த இயந்திரத் தின் துணையோடு அவரால் ஒரு நிமிடத்தில் அந்த இயந்திரத்தை நான்கு வார்த்தைகளை பேச வைக்க முடியும். அவர் கணனியில் இருக்கும் அகராதியிலிருந்து வார்த்தைகளை தேர்வு செய்து பேச வைப்பது போல அது வடிவமைக்கப்பட்டிருக்கும்.

இதற்கிடையில் அவரைப் பார்த்துக் கொள்வதற்காக ஜேன் ஒரு செவி லியரை நியமிக்கிறார். காலப்போக்கில் ஸ்டீபனுக்கும் அந்த பெண்ணிற்கும் இடையில் ஒரு பற்றுதல் உருவாகி விடுகிறது. ஸ்டீபன் ஜேனிடம் தன் The Brief History of Time முடிக்கும் தருணத்தில் தான் அமெரிக்காவிற்கு அந்த செவிலிய பெண்ணோடு செல்ல விரும்புவதாக சொல்வார். அப்போது ஜேன் தன்னால் இயன்றவரை இத்தனை வருடங்கள் அவரைத் தான் நன்றாக பார்த்துக்கொண்டதாக சொல்வார். ஸ்டீபனின் முகத்தில் நீரின் கோடுகள்.

அவர்கள் இருவரும் பின்னர் ராணியை சந்திப்பதற்காக ஒன்றாக செல்வதும் அங்கே தன் மூன்று குழந்தைகளையும் காட்டி "பார், நாம் உருவாக்கியவற்றை" என்று ஸ்டீபன் ஜேனிடம் சொல்வதோடு திரைப்படம் நிறைவுபெறுகிறது. ஸ்டீ பனை விவாகரத்து செய்து ஜோன தானை ஜேன் பின்னாட்களில் திருமணம் செய்துகொள்கிறார். அவருடைய ஆராய்ச்சியையும் முடிக்கிறார்.

உண்மையில் இந்தப் படத்தில் வரக்கூடிய அதீத நாடகத்தருணங்களை வேண்டு மென்றே விட்டுவிட்டார்கள் என்று தோன்றுகிறது. முக்கியமான காரணம் திரைக்கதை ஆசிரியருக்கும் இயக் குநருக்கும் ஸ்டீபன் ஹொக்கிங் மற்றும் அவரது முன்னாள் மனைவி ஜேனின் தனிப்பட்ட வாழ்வை கண்ணியமாக காட்ட வேண்டும் என்ற பொறுப்புணர்வு இருந்திருக்கிறது.

அவர்கள் இப்போதும் நம் மத்தியில் இருக்கிறார்கள் என்ற நேரத்தில் அவர்களின் அந்தரங்க வாழ்வை நாம் விரும்பும் வகையில் காண்பிப்பதில் உள்ள அறப்பிழையை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்றே நினைக் கிறேன். ஜேனும் திரைக்கதையைப் படித்துவிட்டுதான் ஒப்புதல் அளித் திருப்பார் என்றாலும் இந்த அற உணர்வு பாராட்டுக்குரியது. அந்த அற உணர்வால் இந்த அளவுக்குத்தான் நாடகத்தருணங்களைப் காண்பிக்க முடிந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

இந்த படத்தின் நாயகர் ஸ்டீபன் ஹொக் கிங் அல்ல. ஜேன் வயில்ட் தான். எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், கலை ஞர்கள் எல்லோருமே பெரும்பாலும் தன்முனைப்பு கொண்டவர்கள். தங் களைப் பற்றியே சிந்திப்பவர்கள். தங் களைப் பற்றி எண்ணும் போது அவர் களின் ஆக்கங்களையும் சேர்த்துதான்.

அதனால் அவர்களால் பெரும்பாலும் பிறரின் துயரத்தை புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்களுக்கு எவ்வளவு அக்கறை செலுத்தினாலும் அன்பு செலுத்தினாலும் போதாது. அவர்கள் மேலும் மேலும் எதிர்பார்ப்பார்கள்.. அவர்கள் எதையுமே தரமாட்டார்கள். அதனால்தான் அவர்கள் தங்கள் துறை யில் சாதனையாளர்களாக இருக்கிறார் கள். ஆனால் அதன் மறுபக்கம் குரூர மானது. அவர்களின் மனைவியும் பிள்ளைகளும் மிகுந்த மனச்சோர்வுக்கும் எரிச்சலுக்கும் உள்ளாகுகிறார்கள்.

ஸ்டீபன் ஹொக்கிங் விஷயத்தில் அவர்களின் உறவு விசித்திர சிடுக்கு களைக் கொண்டது. ஜேன் ஸ்டீபனின் உடல் பிரச்சினையை அறிந்திருந்தும் அவரை திருமணம் செய்து கொள்கிறார். இது ஒரு தியாகம்.

உடனே ஒரு நவீனத்துவத்திற்கு பிறகான சிந்தனையாளர் எழுந்து இது தியாகம் அல்ல தன்முனைப்பு. அதன் மூலமாக அவர் ஸ்டீபனை சிறுமைப்படுத்துகிறார். பணிவானவராக மாற்றுகிறார் என்று சொல்வார். அதில் உண்மை இருக்கிறது தான். ஆனால் அது மட்டுமல்ல உண்மை. மனிதனால் சக மனிதன் மீது அன்பு செலுத்த முடியும். இதுவும் உண்மைதான்.

ஜேன் ஸ்டீபனின் மீதான காதலால் அன்பால் அவரை திருமணம் செய்து கொள்கிறார். அவர் இரண்டு வருடங்கள் தான் வாழ்வார் என்று மருத்துவர்கள் கூறிய பின்னும் அவர் அதைச் செய் கிறார். இத்தனைக்கும் ஸ்டீபன் அப்போது மாணவர் மட்டும்தான். ஜேனின் செய லில் ஒரு லட்சியவாதம் இருக்கிறது. தான் காதலித்தவர், அன்பு செலுத்திய வர் நோய்மையால் அவதிப்படுகிறார் என்னும் போது அவருடன் இருந்து அவருக்கு இன்னும் அதிக அன்பும் அக்கறையும் செலுத்த வேண்டும் என்ற லட்சியவாதம் அதில் இருக்கிறது. அது ஒரு உயர்ந்த விழுமியம்.

ஆனால் ஒரு ஆண் பெண் உறவு பல சிக்கல்களால் ஆனது. அதில் எப்போதும் அகங்கார சீண்டல்கள் இருக்கும். ஜேன் ஒரு பேட்டியில் ஸ்டீபனிடம் தான் "அவர் ஒரு கடவுள் இல்லை என்பதை சொல்லிக் கொண்டே இருக்க வேண்டியிருந்தது" என்கிறார். ஜேனால் தன் ஆராய்ச்சிக் காக நேரம் ஒதுக்க முடியவில்லை. மேலும் ஜேனின் தியாகமும் அன்பும் அக்கறையும் ஸ்டீபனை தன் இய லாமையை எண்ணி உள்ளுக்குள் எரிச்சலடைய செய்திருக்கும். அதற்கான சாத்தியங்கள் நிறைய இருக்கிறது.

நோய்மை உற்றவர்களை அருகிலிருந்து கவனித்து கொள்பவர்களுக்கு ஒரு முக்கியமான சிக்கல் இருக்கிறது. நோய்மை உற்றவர்களை நன்றாக கவனித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். அன்பு இருக்கும். ஆனால் சட்டென்று எரிச்சலும் வரும். சற்று கவனிக்காமல் விட்டு விட நேரும். அந்த நேரத்தில் கவனமின்மையால் அவர்களுக்கு உடல் பிரச்சினை கள் அதிகரித்துவிட்டால் கவனித்துக் கொள்பவர் குற்றவுணர்வுக்கு உள்ளாவார்.

இது ஒரு முரணியக்கம் போல. ஒன்றும் செய்ய முடியாது. இத்தகைய உறவு களில் அசாதாரணமான லட்சியவாதம் இருபக்கமும் இருக்க வேண்டும். அது எல்லா நேரங்களிலும் சாத்தியமில்லை.

ஸ்டீபன் ஹொக்கிங் ஜேன் இல்லாவிட்டா லும் ஒரு வேளை ஸ்டீபன் ஹொக்கிங் ஆகியிருப்பார். இந்த உலகில் பலரும் அவரது அறிவை வியந்து அவருக்கு உதவியிருப்பார்கள். ஆனால் அவரது உடலையும் உள்ளத்தையும் அறிவையும் நேசித்து அவருடன் வாழ்ந்த ஜேன் ஸ்டீபனின் இன்றைய நிலைக்கு முக்கிய பங்காற்றியிருக்கிறார் என்பது ஒரு உண்மை.

ஜேன் ஒரு வேளை ஸ்டீபனின் உடல் பிரச்சினை காரணமாக அவரை முதலி லேயே விலகியிருந்தாலும் அவர் விமர் சனத்துக்குரியவர் அல்ல. அதுவும் அவரது விருப்பமே.

இந்த கதையை வேறு மாதிரியும் பார்க் கலாம். இதில் எந்த லட்சியவாதமும் இல்லை என்று நிறுவலாம். ஆனால் ஜெயகாந்தன் சொல்வது போல வெங் காயத்தை உரித்து உரித்து பார்த்தால் வெங்காயத்தில் கூட ஒன்றும் இருக்காது தான். சேர்த்து சேர்த்து பார்க்க வேண் டும். சேர்த்தால்தான் நூல் உடையா கிறது. அதுதான் உடலை மறைக்கிறது. ஜேனின் வாழ்க்கை வணக்கத்திற்குரியது.

**(நன்றி: தஸ்தாயெவ்ஸ்கியின் புத்தகசாலை)**



# பெண்களின் உரிமைகள் நாட்டில் உறுதிப்படுத்தப்படும்

## மகளிர்தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



விதிவிலக்கான சமூக மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் இந்த நவீன யுகத்தில், பெண்களுக்கு உரிய இடத்தை வழங்கும் வகையில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கருத்தியல் மாற்றங்களுக்கேற்ப பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மகளிர் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, 2015 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தின தேசிய கொண்டாட்டங்களை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மனிதாபிமான பெறுமானங்களை மதிக்கும் எமது கலாசார பின்புலத்திற்கேற்ப, தாய்மை, அன்பு, கருணை மற்றும் கனிவு போன்ற பெண்களுக்கே உரித்தான உயர் பண்புகள் மீதான எமது தாராளமான மதிப்பை வெளிப்படுத்தும் அதே நேரம் சமூக முன்னேற்றத்திற்கு முழுமையாகப் பங்களிப்பதற்கு அவர்களுக்கு வழிகளை வழங்குவது மிகவும் பொருத்தமானதாகும்.

வெளிநாடுகளில் பல்வேறு கஷ்டமான சூழ்நிலைகளில் பணி செய்து நாட்டின் பெருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான நிதிகளை அனுப்பியும் எதிர்காலத்தில் எமது பிரஜைகளாக விளங்கும் சிறுவர்களை வளர்த்தெடுப்பதில் மிகப்பெரும் பங்களிப்பைச் செய்தும் இந்த நாட்டில் பல்வேறு தொழிற்துறைகளில் பெண்கள் ஆற்றிவரும் பங்களிப்புகளை அங்கீகரித்து மதிப்பது எமது கடப்பாடாகும் என்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

நல்லாட்சிக் கொள்கையானது எமது பெண்களை சமூக மற்றும் வீட்டு வன்முறைகளில் இருந்தும் பெண்களுக்கெதிரான தொந்தரவுகளில் இருந்தும் போதைப பொருள் மற்றும் மதுபானம் தொடரபான பிரச்சினைகளின் மூலம் அவர்கள் எதிர்நோக்கும் ஆபத்துகளிலிருந்தும் எமது பெண்களைப் பாதுகாக்கும் அர்ப்பணத்தைக் கொண்டுள்ளது.

சர்வதேச மகளிர் தின தேசிய கொண்டாட்டங்களின் கருப்பொருளான 'பெண்களுக்கு ஒரு சிறந்த நாடு' என்ற கருப்பொருள் உலகப் பெண்களை கௌரவம் மற்றும் மதிப்பின் புதிய உச்சங்களுக்கு கொண்டு செல்வதற்கும் அவர்களது முன்னேற்றத்திற்காக சிறந்த சமூக மற்றும் சூழலியல் நிலைமைகளைச் சாத்தியப்படுத்துவதனூடாக அவர்களது உரிமைகளை அங்கீகரிப்பதையும் வேண்டிநிற்கும் சர்வதேச மகளிர் தின கருப்பொருளுக்கு முற்றிலும் ஏற்புடையதாக உள்ளது.

எமது நாட்டிலுள்ள பெண்கள் உண்மையாக மதிக்கப்பட்டு பெண்களுக்கான ஒரு சிறந்த நாட்டில் அவர்களது நியாயமான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நாளை நாம் எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

# இரு புதிய ஆணைக்குழுக்களை விரைவில் நியமிக்க திட்டம்

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்ற 19ஆவ்து திருத்தத்தின் கீழ் தேசிய கணக்காய்வு ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்முதல் ஆணைக் குழு என இரு புதிய ஆணைக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த புதிய திருத்தத்தின் படி, ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்து நீதிமன்றத்தின் அடிப்படை உரிமை மனுவின் ஊடாக கேள்வி எழுப்ப முடியும் என்று அரசியலமைப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ஜெயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

19ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தற்போதுள்ள அரசியல் அமைப்பின் படி, ஜனாதிபதி ஒருவரின் செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்ப முடியாது. ஆனால் 19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்வதன் மூலம் இது குறித்து கேள்வி எழுப்ப் வழி செயயப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கான நீதியரசர்களை நியமிக்கும் போது, அரசியலமைப்புச் சபைத் தலைவர், நீதி அமைச்சர், சட்ட மா அதிபர் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஆகியோரின் கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும் என்பதும் இந்த புதிய அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது காணப்படுகின்ற ஆணைக்குழுக்களைத் தவிர்ந்த, தேசிய கணக்காய்வு ஆணைக்குழு மற்றும் தேசிய கொள் முதல் ஆணைக்குழு என இரு புதிய ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும்.

இந்த புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான ஆலோசனைகளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வழங்கியுள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# வழங்கப்பட்ட வாகனங்கள் அனைத்தையும் ஒப்படைத்து விட்டேன்

## முன்னாள் பிரதமர் தெரிவிப்பு



தமக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் அனைத்தையும் மீள ஒப்படைத்து விட்டதாக முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் பயன்படுத்திய 15 வாகனங்கள் இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை என அண்மையில் அரச நிர்வாக அமைச்சர் கரு ஜயசூரிய அமைச்சரவைக்கு அறிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்ன சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போது, தாம் அனைத்து வாகனங்களையும் ஒப்படைத்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனக்கு பாதுகாப்பு வழங்கி வந்த பொலிஸ் அதிகாரிகளிடம வாகனங்கள் அனைத்தையும் ஒப்படைத்து விட்டேன்.

அதற்கு பிறகு வாக்னங்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி எனக்குத் தெரியாது.

15 வாகனங்கள் அல்ல 22 வாகனங்கள் பற்றி என்னிடம் கேட்டார்கள்.

எனினும், நான் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனம் பற்றி மட்டுமே எனக்குத் தெரியும்.

நான் பயன்படுத்திய வாகனத்தை மீள ஒப்படைத்தேன், ஏனைய வாகனங்களை பாதுகாப்புக்கு இருந்த பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்தேன் என முன்னாள் பிரதமர் குறிப்பிட்டுள்ளர்.

இதேவேளை, காணாமல் போன 15 வாகனங்க ளையும் கண்டுபிடிக்க விசாரணை நடாத்தப்படவேண்டுமென பொலிஸ் தரப்பு அறிவித்துள்ளது.

# 29 வீத பெண் ஊடகவியலாளர்களுக்கு வேலைத்தளங்களில் பாலியல் தொந்தரவு

இலங்கையில் பணியாற்றும் 29 சதவீத பெண் ஊடகவியலாளர்கள், தமது வேலைத்தளங்களில் பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனத்தின் ஆய்வில் இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

டீல்ருக்சி, ஹந்துன்நெந்தி என்ற ஊடகவியலாளர்கள் மேற்கொண்ட இந்த ஆய்வின்படி 45 பெண்களில் 28.8 பெண்கள் தாம் வேலைத்தளங்களில் தொந்தரவுக்கு உள்ளாவதாக தெரிவித்துள்ளனர். எனினும் இந்த விடயம் குறித்து முறைப்பாடுகள் எவையும் செய்யப்படுவதில்லை.

பத்திரிகை நிறுவனங்கள் குறித்த முறைப்பாடுகளை, அசட்டை செய்வதன் காரணமாகவே பெண் ஊடகவியலாளர்கள் முறைப்பாடுகளை செய்வதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊழல் மோசடிக் கைதின் போது மிகவும் நிதானத்தை கடைப்பிடிப்போம்

## சுகாதார அமைச்சர் ராஜிதசேனாரத்ன



ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை கைது செய்வது தொடரபில் காட்டுச் சட்டங்களை அமுல்படுத்த முடியாது.

மிகவும் நிதானமான முறையில் நுட்பமாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

100 நாட்கள் திட்டத்தில் பல முக்கியமான விடயங்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் சம்பளங்களை உயர்த்துமாறு கோரப்பட்டது.

எனினும், தற்போது மக்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறு கோருகின்றனர்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை கைது செய்வதாகத் தெரிவித்தே நாம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டோம்.

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரைக் கூட இதுவரையில் கைது செய்யவில்லை என குற்றம் சுமத்தப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பிலான பெறுபேறுகளை இன்னும் இரண்டு வாரங்களில் பார்க்க முடியும்.

காட்டுச் சட்டத்தின் ஊடாக எவரையும் கைது செய்து விசாரணை செய்ய முடியாது.

சுகாதாரத்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுககப்படும் எனவும் தொழிற்சங்கங்களுடன் இணைந்து செயற்பட விரும்புவதாகவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசாங்க பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் 65ஆம் ஆண்டு பொதுச்சபைக கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# மனிதர்கள் ஒடுக்கப்படுவதனை புத்தர் ஒருபோதும் அனுமதித்ததில்லை

## அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு



இன,மத,மொழி அல்லது வகுப்பு ரீதியில் மனிதர்கள் ஒடுக்கப்படுவதனை கௌதம புத்தர் ஒருபோதும் அனுமதித்ததில்லை என வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அண்மையில் முல்கிரியாகலவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளில் வாழ்ந்து வரும் புலிக்குழுக்கள் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக போராட்டங்களை நடத்தியும், உருவ பொம்மைகளை எரித்தும் வருகின்றன.

ஐக்கிய இலங்கை என்ற கோட்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கியமையே இதற்கான காரணமாகும்.

புலிகளின் ஆதரவிலேயே மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றியீட்டினார் என்ற பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக ஐரோப்பாவில் போராட்டம் நடாத்தப்பட்டு வருகின்றது.

தமிழ் சமூகத்திற்கு சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையாக அமைந் துள்ளது.

நாட்டின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் அனைத்து இன, சமூக மக்களும் சமமாக நடாத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஒரு சில தரப்பினர் இனவாத கோட்பாடுகளை பிரச்சாரம் செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

பௌத்தர்கள் பௌத்த மதத்தை பாதுகாக்குமாறு கோருகின்றார்களே தவிர, ஏனைய இன, சமூகங்களை ஒடுக்குமாறு கோரவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிலாவரை நீர் ஊற்று வளாகம் சுற்றுலா மையமாக மறுசீரமைப்பு

(புத்தூர்)

புத்தூர் நிலாவரை வற்றா நீர் ஊற்றுவளாகம் 120 இலட்சம் ரூபா செலவில் சுற்றுலா மையமாக மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாண சபையின் நிதி உதவியுடன் வலி.கிழக்கு பிரதேச சபை சுற்றுலாமைய வேலைத்திட்டத்தை மேற் கொண்டு வருவதுடன் வெளிநாடுகளில் இருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் வரும் சுற்றுலா பயணிகளின் தரிசனத்துக் குரிய முக்கிய இடங்களில் ஒன்றாக புத்தூர் நிலாவரை இருந்து வருகின்றது.

நிலாவரை பகுதி சுற்றுலா பயணிகளுக்கான வசதி வாய்ப்புக்கள் இல்லாத பகுதியாக இருந்து வந்தது. மாதாந்தம் பல நூற்றுக் கணக்கான சுற்றுலா பயணிகள் நிலாவரையை பார்வையிடுகின்றனர்.

வற்றா நீர் நிலை கொண்ட புத்தூர் நிலாவரையில் புராண இதிகாச வரலாற்றுடன் தொடர்பான சிவன் கோவில் மற்றும் 52 அடி நீளம் 32 அடி அகலம் கொண்டவற்றாத நீர் நிலை இந்த நீர் நிலையின் ஆழம் அந்த நீரின் தன்மை தொடர்பான தகவல் சமூகத்துக்கு தெரியாமல் இருந்து வருகின்றது.

இந்த நீர் நிலையின் ஆழம் 320 அடிக்குக் குறையாதது என்றும் இதில் 18 அடி ஆழ நீர் பாவனைக்கு பயன்படுத்தக்கூடிய நல்ல தண்ணீர் என்றும் கூறப்படுகின்றது.

நிலாவரை நீர் ஊற்றில் இருந்து விவசாய பயிர்ச் செய்கைக்கான நீர்ப் பாசனத் திட்டம் நடைமுறையில் இருந்தது. யுத்த சூழ்நிலையால் 1987 ஆம் ஆண்டுடன் நீர்ப்பாசன திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சுற்றுலாமைய வேலைத்திட்டத்தில் சுற்றுலா பயணிகளுக்கான குளியல் அறை வாகன தரிப்பிடம் பூந்தோட்டம் சிறுவர் பொழுது போக்கு அமைப்பு வர்த்தக நிலையம் போன்ற அமைப்புக்கள் நிறுவப்பட்டு சுற்றுச்சுழல் கவர்ச்சிகரமான நிலையில் அழகுபடுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்ததக்கது. (63)

# மூளை முடக்கு வாத குழந்தைகளுக்கு இலவச சக்கர நாற்காலி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

மூளைமுடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இலவச சிகிச்சை, விசேட சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரையும் நடைபெற்றது.

யாழ்கச்சேரிக்கு அண்மையிலுள்ள சுண்டுக்குழியிலுள்ள ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உள்ள பெற்றோர் 250 பேர் வரையில் தமது குழந்தைகளுடன் பங்குபற்றினார்கள். தேவையானோருக்கு நவீன வசதி உள்ள சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை மருத்துவ நிபுணர், சிறப்பு மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் மருத்துவ சேவையினை வழங்கினார்கள்.


கிளிநொச்சியிலிருந்தும் பெற்றோர் தமது குழந்தைகளுடன் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (90)

# ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் 5 ஆவது பொதுக்கூட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சாரணர் துறையில் அதியுயர் விருதான ஜனாதிபதி விருதினை பெற்றவர்களின் மன்றமான வவுனியா ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் 5 ஆவது பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் மாவட்ட ஆணையாளார் எம்.எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக வைத்திய கலாநிதி அ.திலீப்குமார். செயலாளராக சு.காண்டீபன், பொருளாளராக ஸ்ரீ.கேசவன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக த.நிகேதன், உபதலைவராக இ.நிலானி, உபசெயலாளராக வ.பிரதீபன், அ.அனந்தன், மன்றத்தின் உறுப்பினர்களாக வி.அனோஜன், ஜெ.பிரதீபன், நா.கீர்த்தனா, க.பிரதிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப் பொதுகூட்டத் தில் மாவட்ட ஆணையாளர் எம்.எஸ்.பத்மநாதன், உதவி மாவட்ட ஆணையாளர் கமலகுமார், மாவட்ட சாரணர் சங்கச் செயலாளர் ராஜ்குமார் கலந்து கொண்டமை' குறிப்பிடத்தக்கது. (70)



**முல்லைத்தீவில் சர்வதேச மகளீர் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு தொழில்நுட்பக்கல்லூரியில் நடைபெற்றபோது... (160)**



# சொல்லாத சேதி

தமிழ் ஊடகங்கள் சொல்லாதவையும், சொல்ல மறுப்பவையும்

எஸ். அனசூயா



## எதிர்த்தரப்புக்களை தமக்குள்ளேயே மோதவிடும் கலையில் வல்லவர்...?

மீன்களுக்குத் தண்ணீரில்தான் வாழ்க்கை. தரையில் போட்டால் சிறிது நேரம் துள்ளிக் குதித்துவிட்டு அப்படியே உயிர் விட்டுவிடும்.

இந்த இயற்கையின் விதியை இலங்கையின் முன்னாள், இந்நாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நன்றாகவே புரிந்துகொண்டிருக்கிறார்.

ஈழ விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதிகளில், இப்படி போராடும் தரப்போடு மோதிக் காலத்தை வீணடிக்காது, அவர்கள் கேட்பதை இலங்கை அரசாங்கம் கொடுத்து விட்டால், சில நாட்களில் அவர்கள் தமக்குள்ளேயே அடிபட்டு அழிந்து விடுவார்கள் என்று சிலர் சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

இந்த உத்தியை 2002இல் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சரியாகக் கையாண்டார்.

2002 ஆம் ஆண்டு தென்னிலங்கையின் கடுமையான எதிர்ப்புக்களையும் தாண்டி சர்வதேச அனுசரணையுடன் விடுதலைப் புலிகளோடு போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றைச் செய்தார் அவர். போர்நிறுத்த காலத்தில் புலிகள் பல இராணுவ புலனாய்வாளர்களைப் போட்டுத் தள்ளி ஆத்திரமூட்டியும் மீண்டும் மோதலை ஆரம்பிக்காமல் மௌனமாகவே இருந்து தென்னிலங்கையின் எதிர்ப்பை தொடர்ச்சியாகச் சமாளித்து வந்தார்.

அவர் எதிர்பார்த்ததுபோலவே, தொடர்ந்து போர்க்களத்துக்கே பழக்கப்பட்ட விடுதலைப் புலிகள் தமக்குள் முரண்பட்டு புலிகள் இயக்கம் பிளவுபடும் நிலைமை ஏற்பட்டது.

இதை முழுமையாக விளங்கிக்கொள்ளாமல், ரணில்தான் ஏதோ கருணாவை விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரித்தார் என்ற விதமான விமர்சனங்கள் தமிழர் தரப்பில் அப்போது முன்வைக்கப்பட்டது.

உண்மையில், ரணில் கருணாவைப் பிரிக்கவில்லை. சுடச்சுடத் தங்கம் ஜொலிக்கும் என்பதுபோல், போர் தொடரத்தொடர புலிகள் பலமடைவர் என்பதை ஆனையிறவு, கட்டுநாயக்கா உதாரணங்களால் கண்டுகொண்ட அவர், சண்டையிடாமல் சும்மா இருப்பதுதான் அவர்களுக்குக் கடினமான காரியம் என்பதைச் சரியாகக் கண்டுபிடித்தார். எத்தகைய நெருக்கடி வந்தபோதும் பொறுமையாக போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்தார். சும்மா இருந்து பழக்கப்படாத புலிகள் இயக்கம் பிளவுண்டுபோனது.

இதேபோல, தனது தலைமையில் தொடர்ச்சியான தேர்தல் தோல்விகளைச் சந்தித்து ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியிலேயே ஒரு வரலாறு படைத்துவந்த சூழ்நிலையிலும், எஸ்.பி.திசாநாயக்கா, கரு ஜயசூரியா, சஜித் பிரேமதாசா போன்றோர் கட்சிக்குள் செல்வாக்கு மிக்கவர்களாக வளர்ந்து தனது தலைமையைப் பறித்துவிடாதபடி உள்மோதல்களைத் தூண்டிவிட்டு தனது தலைமையை கெட்டித்தனமாக ரணில் பாதுகாத்துக்கொண்டார்.

இப்போதும் பாருங்கள்! தான் ஜனாதிபதி தேர்தலில் நின்றால் வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்து, சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக்கி வெற்றிபெறச் செய்தார்.

பொது எதிரணியில் வெற்றிபெற்று ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன, வெற்றிபெற்ற பின்னர் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட பின்னர், அடுத்த பிரதமர் வேட்பாளர் யார் என்ற பிரச்சினையால் சுதந்திரக் கட்சி பிளவுபடும் நிலையில் நிற்கிறது.

மறுபுறம், ஜனாதிபதி மைத்திரிபாலவின் வெற்றிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவையும் பெற்றே அவர் நினைத்ததைச் சாதித்தார். புதிய ஆட்சியில் நிலைமை ஓரளவு சுமுகமாகலாம் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படத் தொடங்க, அடுத்த தேர்தலில் எதை விற்று வாக்குக் கேட்பது என்ற குழப்பத்தில் இப்போது கூட்டமைப்புக்குள் குத்துவெட்டுத் தொடங்கிவிட்டது.

சும்மா சொல்லக்கூடாது. ஆள் பலே கில்லாடிதான். அவராகப்போய் யாருடனும் மோதமாட்டார். யாருடன் மோதவேண்டி வருகிறதோ, அவர்களை, அவர்களுக்குள்ளேயே மோதும்படி செய்யும் சூழ்நிலையைத் தோற்றுவித்துவிட்டு அமைதியாக இருந்து நடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பார்.

# கோட்டமட்ட கால்பந்தாட்டம் மகாஜனா 2 பிரிவுகளில் வெற்றி

(அளவெட்டி)

தெல்லிப்பளை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் ஆண்களுக்கான 15 வயது 17 வயதுப் பிரிவில் தெல்லிப்பளை மகாஜனா வெற்றி பெற்றுள்ளது.

15 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாவை எதிர்த்து வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் மோதியது. இதில் மகாஜனா 2 :0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. 3 ஆம் இடத்துக்கான போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை எதிர்த்து அருணோதயாக் கல்லூரி மோதியது. இதில் யூனியன் கல்லூரி 1: 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

17 வயது பிரிவு போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாவை எதிர்த்து வசாவிளான் மோதியது. இதில் மகாஜனாவும், வசாவிளானும் 01: 01 என்ற கோல்களை பெற்றது. இதனால் பனாட்டி முறையில் மோதி மகாஜனா 03:02 என்ற கோல் கணக்கில் மகா சம்பியனை தட்டிச் சென்றது.

19 வயது பிரிவு போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாவும் வசாவிளானும் மோதிய தில் வசாவிளான் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றதுடன் 3 ஆம் இடத்தை அருணோதயாக் கல்லூரி பெற்றுக்கொண்டது. (93)

# சண்டிலிப்பாய் கோட்டமட்ட கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(அளவெட்டி)

சண்டிலிப்பாய் கோட்டமட்ட கரப்பந் தாட்டப் போட்டி முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் இந்தக் கல்லூரியில் இப்போட்டிகள் நடைபெற்றதுடன் 15 வயது பிரிவு ஆண்களுக்கான போட்டி யில் முதலாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், இரண்டாமிடத்தை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் விததியாலயமும், மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு ஜெசிந்தா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

17 வயது பிரிவு ஆண்களுக்கான போடடி யில் முதலாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், 2 ஆம் இடத்தை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும், 3 ஆம் இடத்தை இள வாலை புனித ஹென்றியரசரும் பெற்றுக் கொண்டன.

19 ஆவது வயது பிரிவு ஆண்களுக் கான போட்டியில் முதலாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், 2 ஆம் இடத்தை ஆனைக்கோட்டை பால சுப்பிரமணியம் வித்தியாலயமும், 3 ஆம் இடத்தை மாதகல் செ்ன.ஜோசப் வித்தி யாலயமும் பெற்றுக்கொண்டது.

(93)

# ஆகஸ்ட் மாதத்துடன் சங்கக்கார ஓய்வு




இலங்கையின் நட்சத்திர ஆட் டக்காரரான குமார் சங்கக்கார ஆகஸ்ட் மாதத்துடன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற உள்ளதாக அறி வித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக 3 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடர் ஜுலை யில் இலங்கையில் ஆரம்ப மாகின்றது.

37 வயதான குமார் சங்கக் கார கடந்த வருடம் பங்களாதேஷில் நடந்த ருவென்ரி-20 உலகக் கிண்ணத் தொடருடன் ருவென்ரி-20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். இப்போது நடந்து கொண்டிருக்கும் உலகக் கிண்ணத் தொடருடன் ஒருநாள் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறவுள்ளார்.

இதுவரை 130 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சங்கக்கார 12,203 ஓட்டங்களைப் பெற்று அதிக ஓட்டங்களைப் பெற்று ஐந்தாவது இடத்தில் இருக்கிறார். இதில் 38 சதங்கள், 51 அரைச்சதங்களும் அடங்கும்.

# சதத்தில் சாதனை



நடப்பு உலகக் கிண்ண போட்டித் தொடரில் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண வரலாற்றில் இது வரை 24 சதங்கள் அடிக்கப்பட்டதே சாதனையாக இருந்தது. ஆனால் நடப்பு உலகக்கிண்ண லீக் போட்டி கள் முடிவடைவதற்குள் அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1975 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் வெறும் 6 சதங்களே அடிக்கப்பட்டன.

இறுதியாக கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டி யில் 24 சதங்கள் அடிக்கப்பட்டிருந் தன.

நடப்பு உலகக் கிண்ணத் தொட ரில சங்கக்கார அடித்தது 25 ஆவது சதமாகும். இது உலகக் கிண்ணத் தொடரில் புதிய சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்னும் காலிறுதி, அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் மிச்சமிருப்பதால் எத்தனை சதம் விழப் போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# கரப்பந்தாட்ட போட்டி

(அளவெட்டி)

தெல்லிப்பளை கோட்டமட்ட கரப்பந் தாட்டப்போட்டி இன்று காலை 8 . மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 15, 17, 19 வயது பிரிவு ஆண், பெண்களுக்கான போட்டிகள் நடைபெறவுள் ளன. (93)

# எறிபந்து போட்டி யூனியன் சம்பியன்

(அளவெட்டி)

வலிகாம கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்து போட்டியில் 19 வயது ஆண், பெண்களுக்கான பிரிவு போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டி மானிப்பாய் மெமோ றியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற்றது.

19 வயது பிரிவு ஆண்களுக் கான போட்டியின் முதல் சுற்றில் தெல்லிப்பளை யூனியனும் மெமோறியலும் மோதியதில் யூனியன் 25 :18 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

2 ஆவது சுற்றில் மெமோ றியலை எதிர்த்து மோதிய யூனியன் 25 : 12 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று வலய சம்பியனை சுவீகரித்தது.

19 வயது பெண்களுக்கான போட்டியின் முதல் சுற்றில் யூனி யனும் இளவாலை கன்னியர் மடமும் மோதியது இதில் யூனியன் 25 :18 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

2 ஆவது சுற்றில் இளவாலை கன்னியர்மடத்தை எதிர்த்து மோதிய யூனியன் 25 : 9 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது வலய சம்பியனை பெற்றுக் கொண்டது. (93)

# 300 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை



(அளவெட்டி)

நியூசிலாந்து அணியின் சுழற் பந்து வீச்சாளர் டானியல் விக்டோரி, ஒருநாள் போட்டியில் 300 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

உலகக் கிண்ண தொடரின் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான லீக் போட்டியில் 10 ஓவர்களில் 18 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதில் 2 ஆவது விக்கெட்டை எடுத்த போது அவரது ஒட்டு மொத்த விக்கெட் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்தது.

இதன்மூலம் ஒருநாள் போட்டி யில் 300 விக்கெட் கைப்பற்றிய முதல் நியூசிலாந்து வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

விக்டோரி 291 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 302 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

அவருக்கு அடுத்து நியூசி லாந்து வீரர்களில் மில்ஸ் 170 போட்டிகளில் 240 விக்கெட்டுக ளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

உலகளாவில் இந்த மைல் கல்லை கடந்தவர்களில், 36 வயதான விக்டோரி 12 ஆவது வீரர் ஆவார்.

## உலகக் கிண்ணம் 2015

ICC CRICKET WORLD CUP

**இன்றைய ஆட்டம்**

இந்தியா
எதிர்
அயர்லாந்து


இடம்- ஹமில்டன்
நேரம்- காலை 06.30

**நாளைய ஆட்டம்**

ஸ்கொட்லாந்து
எதிர்
இலங்கை.

இடம்- ஹோபாட்
நேரம்- காலை 09.00

# இல்ல மெய்வல்லுநர் போட்டி




காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம்

50




புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம்




யாழ்.இந்து மகளீர் கல்லூரி

51




யாழ்.அல்ஹதீஜா, சேர் அமீர்முன்பள்ளிகள்

105

# மைத்திரியும் சந்திரிகாவும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியை ஐக்கிய தேசியக்கட்சிக்கு தாரை வார்க்க முயற்சி!

- வி. சின்னத்தம்பி கட்டுரையிலிருந்து.

ஐ.தே.க.வின் உதவி இல்லா விட்டால், அதன் வாக்குவங்கி இல்லாவிட்டால், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் ஒருபோதும் வெற்றி பெற்றிருக்க முடியாது. அவர் இப்பொழுது சிறீ.ல.சு.கட்சியின் யாப்பைப் பயன்படுத்தி அக்கட்சியின் தலைவராக ஆகி இருப்பினும், உண்மையில் அவர் அக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவரல்லர். உண்மையில் அவர் சாராம்சத்தில் ஐ.தே.க.வின் ஜனாதிபதி தான்.

எனவே அவரை முன்னிறுத்தியதில் பெரும் பங்கு வகித்த சந்திரிகாவோ, வெற்றி பெற்ற மைத்திரியோ, ஐ.தே.க.வுக்கு "துரோகம்" இழைத்துவிட முடியாது. எனவே சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட ஐ.தே.க. அரசை நியாயப்படுத்து வதற்காக, "தேசிய அரசாங்கம்" என்ற பெயரில் சிறீ.ல.சு.கட்சி யையும் அந்த அரசுடன் இணைப்பதற்கு மைத்திரியும். சந்திரிகாவும் முயல்கின்றனர்.

அப்படிச் செய்யாவிட்டால் சுதந்திரக் கட்சிக்குள் மகிந்தவின் கை ஓங்கி அடுத்த பொதுத் தேர்தல் மூலம் மீண்டும் அவர் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிடுவார் என அவர்கள் அஞ்சுகின்றனர். எனவே அவர்கள் நிலை "ஆப்பிழுத்த குரங்கின்" நிலையாகி விட்டது.

அவர்கள் அஞ்சுவதற்குக் காரணம் மகிந்தவுக்கு ஆதரவாக எழுந்துள்ள மக்கள் எழுச்சி மட்டுமல்ல. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த தோல்வியுற்றாலும் அவருக்கு ஆதரவாக 58 இலட்சம் மக்கள் வாக்களித்துள்ளனர் என்பது புறந்தள்ள முடியாத ஒரு விடயமாகும்.

பொதுத் தேர்தல் ஒன்று நடக்குமாயின், எதிரும் புதிருமான கட்சிகளான ஐ.தே.க, ஜே.வி.பி, ஹெல உறுமய, பொன்சேகவின் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பன ஒரு அணியில் போட்டியிடும் என எதிர்பார்க்க முடியாது. எனவே பொதுத் தேர்தல் ஒன்று நடந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றுவிடும். அதனால்தான் ரணில் - மைத்திரி - சந்திரிகா கூட்டு கலங்கிப் போய் இருக்கிறது.

முதலில் ஐ.தே.க.வுடன் எந்தக் கூட்டோ அல்லது அதனுடன் தேசிய அரசாங்கமோ என்ற பேச்சுக்கே இடமில்லை என சுதந்திரக் கட்சி தீர்மானித்திருந்தது. இதன் காரணமாக விரைவில் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் தான் அதிகாரத்தை இழப்புது நிச்சயம் என்பது ஐ.தே.க.வுக்குத் தெரிந்துவிட்டது. அதனால் அக்கட்சி மைத்திரிக்கு நெருக்குவாரம் கொடுத்து சுதந்திரக் கட்சியை எதிர்க்கட்சி நிலையிலிருந்து ஆளும் கட்சியின் வாலாக மாற்றும் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.


அவர்களின் திட்டத்துக்கு ஏற்ப மைத்திரி அண்மையில் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு நாள் செயலமர்வு ஒன்றை நடாத்தியுள்ளார். அதில் ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சியும் இணைய வேண்டும் என நிர்ப்பந்தம் செய்துள்ளார்.

அதற்கு பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்த போதும், பதவி விருப்பம் கொண்ட சில உறுப்பினர்களின் உதவியுடன் அவர்களின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. ஆனால் எப்படியும் சிறீ.ல.சு.கட்சியின் முழுத் தலைமையும், முழு அணிகளும் மைத்திரியின் சுயநலக் காட்டிக் கொடுப்புக்கு விலை போகும் எனச் சொல்ல முடியாது.

மைத்திரியின் செய்கையால் இவ்வளவு காலமும் கட்டிக்காக் கப்பட்டு வந்த சுதந்திரக் கட்சியின் ஐக்கியம் சீர்குலையும் அபாயம் எழுந்துள்ளது. அதுமட்டுமல்ல, கட்சி பிளவுப்படும் அபாயமும் உருவாகியுள்ளது. ஏதோ ஒரு வகையில் சுதந்திரக் கட்சியை இல்லாமல் ஒழிக்க வேண்டும் என்று திட்டமிட்டு வந்த ஐ.தே.க.வினதும், அதன் சர்வதேச எஜமானர்களினதும் எண்ணங்களுக்கு மைத்திரியும், சந்திரிகாவும் வடிவம் கொடுக்கும் வேலையை ஆரம்பித்து விட்டனர்.

"ரணில் - மைத்திரி கூட்டு ஆட்சிக்கு வந்ததின் மூலம் தமக்கு எதிரானவர்கள் மீதான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளே நடக்கின்றன. "நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்போம்" என்ற அவர்களது வாக்குறுதியும் காற்றோடு காற்றாய் போய்விட்டது. 100 நாள் வேலைத்திட்டம் நிறைவுற்றதும் பாராளுமன்றத்தை ஏப்ரல் 23ஆம் திகதி கலைத்து பொதுத் தேர்தல் நடாத்தப்படும் என்ற வாக்குறுதியும் கைவிடப்பட்டு விட்டது.

பெரும்பான்மை சிங்கள மக்களை மையமாக வைத்து வழங்கப்பட்ட இந்த இரண்டு வாக்குறுதி களுமே கைவிடப்பட்டு விட்டது என்றால், சிறுபான்மை இனங் களான தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கு வாக்குறுதி எதுவுமே வழங்கப்பட்டி ராத நிலையில் அவர்களது கதி என்னவாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.




## இரத்தக்...
## உயர்த்தி...

விடுதலைப்புலிகள் மக்களினைப் பணயமாக வைத்திருக்கிறார்கள் என்ற உண்மையினையும், அவர்கள் தப்பிச் செல்ல முயன்ற மக்கள் மீது ... தலைமைகள் மறுத்தமை 2009 இல் நடைபெற்ற ... நிலைமையினை மேலும் மோசமாக்கியது.

பொய் கூறுகின்ற, கொலை அரசியலினைத் ... பற்றி சுய விமர்சனம் செய்ய மறுக்கின்ற இந்த ... களைத் தொடர்ந்தும் தாக்கியபடி இருக்கிறது. ...

முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் இன அ... தொடர்பில் உரையாட முற்படும் தரப்புக்களை ... வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்தச் செ... கைப்பற்றுவதனை நோக்கி முன்னெ... இன அ... மிகவும் ... ியல் ... இந்...



# தும்பை விட்டு வாலைப் பிடிப்பது ஏன்?

இனப்பிரச்சினை தீராதிருக்கும் வரை அதன் பக்க விளைவுகளுக்கு (காணிப்பிரச்சினை, கைதிகள் விடுதலை, இராணுவப் பிரசன்னம், மீள்குடியேற்றம் போன்றன...) முழுமையான தீர்வு கிடைப்பது சாத்தியமில்லை என்பதை, நாம் விளங்கிக்கொண்டு இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதில் கூடுதலான கவனம் செலுத்துவதாக இல்லை.

ஐக்கிய இலங்கையில் நடைமுறைச் சாத்தியமானதும் நின்று நிலைக்கக் கூடியதுமான அசியல் தீர்வு என்று திரும்பத் திரும்பக் கூறுவதும், அரசாங்கமே தீர்வை முன்வைக்க வேண்டும் என்று சொல்வதும், அரசாங்கம். தீர்வை முன்வைக்காவிட்டால் சாத்வீகப் போராட்டம் என்று எச்சரிப்பதும் தீர்வுக்கான முயற்சியல்ல. தமிழ்த் தலைமை தீர்வை முன்வைக்காமல் அரசாங்கமே தீர்வை முன்வைக்க வேண்டுமெனக் கூறுவது பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் செயல்.

முதலில் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதன் அடிப்படையில் அரசாங்கத்துடன் பேச்சவார்த்தை நடாத்துவதும் அரசியல் தீர்வு தொடர்பாகச் சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்தும் முயற்சியை மேற்கொள்வதும் அவசியம் ஏற்பட்டால் மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதும் அரசியல் தீர்வுக்கான முயற்சியில் முக்கியமானவை. தீர்வுத் திட்டம் இல்லாமை மிகப் பெரிய குறைபாடு.

நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்கும் திறமை வாய்ந்த பலர் கூட்டமைப்புத் தலைமையில் உள்ளனர். அப்படியிருந்தும் ஏன் ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரிக்கவில்லை என்ற கேள்வி நியாயமானது. கூட்டமைப்பின் உயர்மட்டத்தில் இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் இருக்கின்றார்கள் என்றும் உடன்பாட்டுக்கு வர அவர்களால் முடியவில்லை என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

மக்களின் பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வு தேவை என்பதில் உடன்பாடு காணமுடியாத தலைமை மக்களுக்கு விமோசனம் பெற்றக்கொடுக்கக் கூடியதல்ல. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையை வளர்த்த தலைவர்கள் அது எவ்வாறான தீர்வாக இருக்கும் என்று மக்களுக்கு கூறமுடியாமைக்கு இவர்களுக்கிடையே உடன்பாடு இல்லாமையே காரணம்.

- சிவா சுப்பிரமணியம்




# ஜட்டிப் ...

நம் அரசியல்வாதிகளின் ... வெற்றிக்காகவும், வென்றபின் ... செயற்படுவதாகக் காட்டிக் கொ... போராட்டங்களை அவ்வப்போ... வார்கள். தங்கள் பதவிகளைத் ... இங்கு போராட்டங்கள் அரசிய... வெடித்துக்கொண்டிருக்கின்றன.

ஆனால் உலகெங்கும் மக்க... தேவைகளை நிறைவேற்றிக்கொ... இறங்கிப் போராடிக்கொண்டிருக்... அமெரிக்காவில் நியூயோர்க் நக... பொதுப் பிரச்சினைக்காக ஆண்... இணைந்து போராடியிருக்கிறனர். ... எல்லோருமே ஜட்டி அணிந்து வீ... வித்தியாசமான போராட்டத்தை ந...

போராட்டத்திற்கான காரணம், ... உடல் உறுப்புகள் பலவீனம் அ... சிலருக்கு சிறுநீர் வெளியேறுவதை ... முடிவதில்லை. இதற்கு மருந்து க... தயாரிப்பு நிறுவனங்கள் அக்கறை ... நல்ல, தரமான மருந்து கண்டுபிடிக்... கோரிக்கையை வைத்து இந்த ஜட்... அவர்கள் நடத்தியுள்ளனர்.

# நீரிழிவு நோய் குணமாக!



- டாக்டர் கனகதுர்கா -

நீரிழிவு நோய் இல்லாதவர்களே குறைவு என்று சொல்லும் வகையில் பெரிய தாக்கத்தை உருவாக்கி உள்ளது இந்த நோய். நண்பர்களின், உறவினர்களின் நல விசாரிப்பிலும் கூட இடம் பெறும் அளவிற்கு மனிதர்களை அச்சுறுத்தும் இந்த "நீரிழிவு நோய்" உண்மையில் நோய் அல்ல; அது ஓர் உணர்வுதான்.

நீரிழிவு நோய் நாம் பயப்படுகிற அளவிற்கு பெரிய நோயே இல்லை. இது முற்றிலும் குணப்படுத்தக் கூடிய ஒன்றுதான். நீரிழிவு நோய் வரக் காரணம் உணவு முறை. சரியான முறையில் நாம் உண்ணும் உணவு செரிமானம் ஆகவில்லை என்றால் உணவு புளிப்பாக மாறிவிடும். புளிப்புத் தன்மையாக மாறும் உணவானது மார்புக்கும், வயிற்றுக்கும் இடையில் உள்ள பகுதியில் கொழுப்பாகப் படிந்துவிடும். இதுதான் 98வீதம் மக்களுக்கு நோய் ஏற்படக் காரணம்.

இந்த புளிப்புத் தன்மையானது கணையத்தை இன்சுலின் சுரக்கவிடாமல் தடுக்கிறது. இன்சுலின் உடலுக்குத் தேவையான அளவு சுரக்கவில்லை என்றால் உடலில் நீரிழிவு நோய் உண்டாகும். மேலும் கணையம் சரியாக வேலை செய்யவில்லை என்றால் உடலுக்கு இரத்த ஓட்டம் சரியாக நடக்காது. இதன் காரணமாகவே நீரிழிவு நோய் வந்தவர்கள் சில மாதங்களில் நிறம் மாறி, தோற்றப் பொலிவும் மறைந்து உருக்குலைந்து போகிறார்கள்.

நீரிழிவு நோய் வருவதற்கு முன்பு உடல் சோர்ந்து போகும், காரமாகச் சாப்பிட வேண்டும் என்று தோன்றும், இனிப்பாகச் சாப்பிட வேண்டும் போல் இருக்கும். சாப்பிட்டு முடித்த பிறகு சாப்பிட்ட நிறைவு இல்லாமல், பத்து நிமிடத்திற்குள் மீண்டும் பசி எடுப்பது போன்ற உணர்வு இருக்கும். சாப்பிட்டு முடித்தவுடன் கோப்பையை அப்படியே தள்ளிவைத்துவிட்டு படுத்துக் கொள்வார்கள். சிலருக்கு நெஞ்சு கரிப்பு இருக்கும்.

இந்த நிலையில் நாம் இதைக் கண்டறிந்து சுதாரித்துக் கொண்டால் பரம்பரை பரம்பரையாக நீரிழிவு நோய் இருந்திருந்தாலும் நமக்கு வராமல் தற்காத்துக் கொள்ளலாம்.

அதுபோல மனசுக்கும், உடலுக்கும் சம்பந்தம் உண்டு. அதனால் நீரிழிவு உள்ளவர்கள் பிரச்சினை வருமோ என்ற பயத்துடன் உணவுகளை ஒதுக்காமல் இந்த உணவு என்னை ஒன்றும் செய்யாது என்ற நினைப்புடன் உண்ண வேண்டும். அப்படி நினைத்தாலே பெருமளவுக்கு நோய் நம்மை ஒன்றும் செய்யாது.

ஒருவருக்கு நீரிழிவு நோய் இருப்பது தெரிந்தால் அவருக்கு மருத்துவமனையில் கொடுக்கும் முதல் சிகிச்சை சீனியின் அளவைக் கண்டறிந்து கணையத்தை வேலை செய்ய வைப்பதுதான். இதற்காக இன்சுலினை ஊசி மூலம் செலுத்துகிறார்கள். இப்படி இன்சுலினை அதிக அளவு எடுத்துக் கொண்டாலும் ஆபத்துதான். காரணம் இன்சுலினில் இருக்கும் ஒரு வகையான இரசாயனம் உடலுக்கு நல்லதல்ல,

அந்த இரசநாயனம் பற்றி அறிய ஓர் உதாரணம்: கோழிப் பண்ணைகளில் உள்ள வெள்ளை நிற லகான் கோழிகள் சீக்கிரம் பெரிதாக எஸ்.என்.எஸ் என்கிற இரசாயனத்தை அதன் உடலில் செலுத்துவார்கள். இதனால் அந்த கோழி 32 வாரங்களில் உடல் பெருத்துவிடும். சில கோழிகள் அதன் வீரியம் தாங்காமல் வெடித்து இறந்துவிடும். இப்படித்தான் கோழிப்பண்ணைகளில் உள்ள கோழிகள் பெரும்பாலும் இறக்கும். இந்த இரசாயனம்தான் இன்சுலினிலும் இருக்கிறது. இப்போது புரிகிறதா? இன்சுலின் வேண்டாம் என்று சொல்வதற்கான காரணம்.

சரியான தூக்கமின்மைகூட செரிமானக் கோளாறை உண்டாக்கும். அதுபோன்ற நேரங்களில் தூக்கம் வருவதற்கு கல் உப்பை சட்டியில் போட்டு வறுக்க வேண்டும். அப்படி வறுத்தால் உப்பு வெடித்து லேசாக சாம்பல் நிறமாக மாறும். அப்படி செய்யும்போது உப்பில் உள்ள இரசாயனம் போய்விடும். அதன்பிறகு அந்த உப்பைச் சிறிது எடுத்து நாக்கிற்கு கீழ் வைத்துக் கொண்டால் தூக்கம் வந்துவிடும். இது நீரிழிவு நோய் இல்லாதவர்களும் செய்யலாம்.

நீரிழிவு நோய் வந்துவிட்டால் சரி செய்யவே முடியாது என்று சொல்வது உண்மையல்ல. முதலில் ஒரு விஷயத்தை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். ஒரே நாளில் யாருக்கும் நீரிழிவு நோய் வருவதில்லை. இதனால் இன்சுலின் உதவி இல்லாமலேயே இயற்கை முறையில் கணையத்தை வேலை செய்ய வைக்க முடியும். இதற்காக ஒரு சில விடயங்களைக் கடைப்பிடித்தாலே போதுமானது. அவை:

★ நாம் உண்ணும் உணவைக் குறைந்தது 20 நிமிடமாவது மெதுவாகச் சுவைத்து நன்றாக மென்று சாப்பிட வேண்டும். நின்று கொண்டு சாப்பிடக் கூடாது.

★ அடுத்து உணவு உண்ணும்போது இடையில் தண்ணீர் அருந்தக் கூடாது. உணவும், தண்ணீரும் ஒன்றுசேர்ந்து நீண்ட நேரம் வயிற்றில் சுற்றிக்கொண்டே இருக்கும். விரைவில் செரிமானம் ஆகாது. இது நீரிழிவு நோய் வர மிக முக்கியமான காரணம். சாப்பிட்டு முடித்த கால் மணி நேரமோ அல்லது அரை மணி நேரமோ கழித்து 2 தம்ளர் வெந்நீர் மட்டும் குடித்துப் பழக வேண்டும். முதல் இரண்டு நாள்கள் உடல் அதை ஏற்க மறுக்கும். அதன்பிறகு பழகிவிடும்.

★ அதுபோல காலை 9 மணி முதல் 11 மணிவரை மண்ணீரல் வேலை செய்யும் நேரம். இந்த நேரத்தில் எதுவும் சாப்பிடாமல், தண்ணீர்கூட குடிக்காமல் ஒரு விரதம் போன்று இருந்தோமானால் எப்படிப்பட்ட நீரிழிவும் விரைவில் கட்டுக்குள் வந்துவிடும்.

★ அடுத்து மூளைக்கு வேலையா? உடலுக்கு வேலையா? என்று பார்க்க வேண்டும். உடல் உழைப்பு இல்லாமல் கம்ப்யூட்டர் முன் குளிர் அறையில் அமர்ந்து வேலை செய்பவர்கள் உடலில் வியர்வை வரும்படி தினமும் 1 மணி நேரமாவது உழைக்க வேண்டும்.

★ வாரத்திற்கு ஒருமுறை அரை தம்ளர் இஞ்சிச்சாறு குடிக்க வேண்டும். முழுக்க முழுக்க கல்சியம் உள்ள உணவு இஞ்சி. இஞ்சிச்சாறு குடித்து வரும்போது எலும்பு, எலும்பு மச்சைகளுக்கு நல்ல பலம் கிடைக்கும். நல்ல இரத்தத்தை உருவாக்கும். இஞ்சிச்சாறுடன் தேன் கலந்து குடிக்கலாம்.

★ ஒரு பிடி காம்புடன் உள்ள கறிவேப்பிலை, ஒரு பிடி வேருடன் உள்ள கொத்தமல்லி, ஒரு பிடி புதினா இலைகள் இம்மூன்றையும் நன்கு அலசி மிளகுத் தூள், சீரகத் தூள் சேர்த்து 2 லீற்றர் தண்ணீரில் இட்டு காய்ச்ச வேண்டும். இந்த தண்ணீர் 1 லீற்றராக வந்த பிறகு ஆற வைத்து போத்தலில் எடுத்து வைத்துக்கொண்டு குடித்து வரலாம்.

★ நெஞ்சு கரிப்பு ஏற்பட்டால் உடனே வீட்டில் பனங்ட்டி இருந்தால் ஒரு துண்டு எடுத்து வாயில் வைத்துக் கொண்டால் பின்னாளில் எந்த நோயும் வராது. உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

★ வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ 1 பெரிய நெல்லிக்காய், 1 பிடி கறிவேப்பிலை, சீரகம், 1 சுண்டு விரல் அளவு இஞ்சி எடுத்து மிக்சியில் அரைத்துக் குடித்து வர கணையம் நன்றாக வேலை செய்ய ஆரம்பிக்கும்.

★ நீரிழிவு நோயாளிகளுக்கு தோசை, இட்லி ஆரோக்கியமற்ற உணவு. காரணம் மா புளித்த பிறகுதான் இதைச் செய்கிறோம். இந்த புளிப்புத் தன்மையானது கணையத்திற்கு ஏற்றது அல்ல. ஆனால் தோசை இட்லிதான் சாப்பிட வேண்டும் என்று நினைப்பவர்கள், காரம் கொஞ்சம் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதைவிடச் சிறந்தது, சிறு தானியங்களைத் தனித்தனியாக முளைகட்டி அதனை நிழலில் உலர்த்தி அரைத்து மாவாக்கி அதனுடன் உளுந்தை ஊற வைத்து அரைத்து, மிளகு, சீரகம், கறிவேப்பிலை, கொத்துமல்லி சேர்த்து கலந்து உண்ணலாம். இது செரிமானத்திற்கு மிகவும் நல்லது.

★ உற்சாகமின்மை கூட நீரிழிவு நோயாளிகளுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும். அடுத்து மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவை எல்லாமே செய்தாலும், தினமும் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கியமான மூன்று விஷயங்கள்: உணவை தினமும் 20 நிமிடம் சாப்பிட வேண்டும், சாப்பிடும்போது தண்ணீர் குடிக்கக் கூடாது, காலை 9-11 மணிவரை கட்டாயமாக எதுவும் சாப்பிடக் கூடாது. இப்படி செய்து வந்தால் நிச்சயம் நீரிழிவு நோயிலிருந்து முற்றிலுமாகக் குணமாக்கிவிடலாம்.

## ...க்கறை படிந்த கரங்களை ...திக் கோஷமிடும் அபத்தம்!

...சுடுகிறார்கள் என்ற உண்மையினையும் தமிழ்த் ...ற போரில் மாட்டிக்கொண்ட பொதுமக்களின்

...த் தோற்றுவிப்பதில் தனக்கு இருந்த பங்கினைப் ...ந்த நீண்ட வரலாறு, தமிழ் அரசியல் தலைமை- ... இந்தப் பித்தலாட்டம் இன்றும் தொடர்கிறது. ...அழிப்புத் தீர்மானம் அரசாங்கத்துடன் பிரச்சினைகள் ...ள அரக்கர்களாக சித்தரிக்கும் முயற்சிகளுக்கு ...செயற்பாடு தமிழ் அரசியல் தலைமைத்துவத்தினைக் ...னெடுக்கப்படுகின்றன.

...அழிப்பு (Genocide) என்ற பதப் பிரயோகம் ...ம் எளிமைப்படுத்தப்பட்ட முறையில் ஒரு அரச- ...ல் சுலோகமாக இன்று பயன்படுத்தப்படுகிறது. ...ந்தச் சுலோகத்தினைக் கையில் எடுத்துள்ள அரசியல்வாதிகள் பலரின் கைகள் இரத்தக்கறை படிந்தவை என்பதனையும் நினைவுபடுத்த வேண்டும்.

பொதுமக்களின் நலன் குறித்து எந்தவிதமான கரிசனையும் இல்லாது எல்லாத் தரப்பினராலும் இந்தப் போர் மேற்கொள்ளப்பட்டது என்பது ஒரு மறுக்கமுடியாத உண்மை.

- ராஜன் ஹூல், என். சிவபாலன், கே. சிறிதரன் அகிலன் கதிர்காமர், ஆகியோரது அறிக்கையில்





## காலில் விழுந்த எம்.எஸ்.வி!



"ஒரு பாட்டு சரியாக வரும்வரை, தான் எதிர்பார்த்தபடி அமையும் வரை, பாடுவோர் மற்றும் வாசிப்பவர்களை கொஞ்சம் கூட தயவு தாட்சண்யமின்றி வேலை வாங்குவார்

எம்.எஸ்.வி. சிரித்து வாழ வேண்டும் என்ற படத்தில், "மேரா நாம் அப்துல் ரஹ்மான்..." என்ற பாடலை டி.எம்.சவுந்தரராஜன் பாடிய போது, எம்.எஸ்.வி.க்கு அது திருப்தியாக இல்லை. தான் எதிர்பார்த்த, "எபெக்ட்" வராததால், டி.எம்.எஸ்.சை, திரும்பத் திரும்ப பாடவைத்துக் கொண்டிருந்தார்.


ஒரு கட்டத்தில், பொறுமை இழந்த டி.எம்.எஸ். "கோவில்ல சுண்டலுக்குப் பாடினாலும் பாடுவேனே தவிர.. இனிமேல் உனக்குப் பாட மாட்டேன்..." என்று சொல்லி, ஒலிப்பதிவை முடிக்காமலேயே கோபித்துக் கொண்டு, வீட்டுக்குப் போய்விட்டார்.

மறுநாள், டி.எம்.எஸ். வீட்டுக்குப் போன விஸ்வநாதன், டி.எம்.எஸ். காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு, "நீங்கள்தான் பாடணும் நீங்கள் பாடினால் தான் அந்தப் பாட்டு சரியா வரும்..." என்றார்.

எதிர்பாராத எம்.எஸ்.வி.யின் இந்த நடவடிக்கையால் நிலைகுலைந்து போன டி.எம்.எஸ். உடனே, ஸ்டுடியோ வந்து விஸ்வநாதனின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப பாடிக் கொடுத்தார்.

(ராணி மைந்தன் எழுதிய, 'மெல்லிசை மன்னர் எம்.எஸ்.வி., நூலில்)

## ...போராட்டம்!



...தேர்தல் ...ர் மக்களுக்கு ...காள்வதற்காகவும் ...த அறிவித்து முழங்கு ...5 தக்கவைப்பதற்காகவே ...ல்வாதிகளின் வாய்களில் ...

...ள் என்னென்னவோ ...ாள்ள வீதிகளில் ...க்கிறார்கள். சமீபத்தில், ...ரில், ஒரு வித்தியாசமான ...களும், பெண்களும் ... அதுவும் எப்படி? ...தியில் இறங்கி, அந்த ...டத்தினர்.

... முதுமையின் போது, ...டந்து விடுவதால், ...த கட்டுப்படுத்த ...ண்டுபிடிப்பதில், மருந்து ... காட்டுவதில்லை என்றும் ...க்க வேண்டும் என்ற ...டிப் போராட்டத்தை




# இந்த மரத்தின் கதையைக் கேளுங்கள்



சில வருடங்களுக்கு முன், ஒரு அழகான ஊரில் ஒரு பெரிய அப்பிள் மரம் இருந்தது. அந்த மரத்துடன் விளையாடுவதையே ஒரு சிறுவன் வழக்கமாக கொண்டிருந் தான். தினமும் அந்த மரத்தை பார்க்க கண்டிப்பாக வந்திடுவான். அந்த மரமும் அவனுடன் விளை யாடி மகிழ்ந்தது. அப்பிள்களை பறித்து விளையாடுவது, மரக்கிளை யில் தொங்குவது, மரத்தைக் கட்டிக கொள்வது என்று சின்ன சின்ன குறும்புகள் செய்து விளையாடிக் கொண்டிருந்தான். அவனை பார்க்கும் போதும், அவனுடன் விளையாடும் போதும அந்த மரத் திற்கு அளவற்ற மகிழ்ச்சி.

சிறுவன் கொஞ்சம் பெரியவன் ஆனதும் ஒரு நாள் மரத்தை பார்க்க வந்தான். அவனை பார்த்த தும் மரம் "வா வந்து என்னுடன் விளையாடு " என்று ஆசையாக அழைத்தது. சிறுவன் "இல்லை இப்போதெல்லாம அப்படி விளை யாட முடியாது, நான் பெரியவன் ஆகி விட்டேன் எனக்கு விளையாட பொம்மைகள் வேண்டும் " என்றான். மரம், "என்னிடம் பொம்மைகள் எதுவும் இல்லை, என்னிடம் இருக்கும் அப்பிள்களை பறித்துக் கொள். அதை விற்றுப் பணமாக்கி பொம்மை வாங்கிக் கொள் என்றது "சிறுவனின் முகம் உடனே மலர்ந் தது. அப்படியா உண்மையாவா!! என்று எல்லா பழங்களையும் பறித் துக கொண்டு சென்றான் அதன பின் மரத்தைப் பார்க்க வரவில்லை. மீண் டும் சில நாட்கள் கழித்து வந்தான். இம்முறையும் மரம " வா , வந்து என்னுடன் விளையாடு " என்று அழைத்தது. அவன் இல்லை நான் இக்கட்டான சூழ்நிலையில் இருக் கிறேன். நான் என் குடும்பத்தை பார்த்துக் கொள்ள வேண்டும். நாங்கள் தங்குவதற்கே வீடு இல் லாமல் இருக்கிறோம். உன்னால் எங்களுக்கு வீடு தர முடியுமா என் றான் சிறுவன். அதற்கு மரம் "என்னிடம் வீடு இல்லை, என் கிளைகளில் சிலவற்றை எடுத்துக் கொள், அதைக் கொண்டு சின்ன வீடு அமைத் துக் கொள் " என்றது. மீண்டும் அவ னின் சந்தோசத்தை கண்டு மரம் மகிழ்ந்தது. தன்னிடம் இருப்பதை இழக்கிறோம் என்று மரம் கொஞ்சமும் வருந்தவில்லை.

வழக்கம் போல் மரம் அவன் வரவிற் காக ஏங்கி தவிக்கிறது. நீண்ட நாட்கள் கழித்து மீண்டும் ஒரு கோடை நாளில் வந்தான். எனக்கு வெப்பமாக இருக்கி றது. கடலுக்கு செல்ல ஆசையாக இருக்கு. எனக்கு ஒரு படகு வேண்டும் என்றான். மரம் என்னிடம் படகு இல்லை. ஆனால நீ என் தண்டுப் பகுதியை எடுத்து படகு செய்து கொள் என்றது அவனுக்கு வேண்டியதைப பெற்றுக் கொண்டு சென்று விட்டான். காலங் கள் ஓடி அவனுக்கும் வயதாயிற்று. அப்போதும் ஒரு நாள் மரத்தைப் பார்க்க வருகிறான். இம் முறையும் மரம் அவனை ஆசையாய் வரவேற்று அரவணைக்க நினைக்கிறது. எனக்கு வயதாகிவிட்டது. மிகுந்த களைப் பாய் இருக்கு. நான இங்கு ஓய்வு எடுக்க ஆசைப்படுகிறேன் என்றான். எல்லாவற்றையும் இழந்தும் சிரித்துக் கொண்டே மரம் "என்னிடம் இருப்பது வேர் மட்டுமே. நீ என் வேர்ப்பகுதியை சிறிது வெட்டி விட்டு அந்த இடத்தில் ஓய்வு எடுத்துக் கொள் " என்று சொல்லிக் கொண்டே சாகிறது அவனும் அவ்வாறே செத் துக் கொண்டிருக்கும் மரத்தின் மேலே படுத்துக் கொண்டான்.

நிதி கதையில் இருந்து உங்க ளுக்கு என்ன புரிகிறது. நாம் மரங் களிடம் இருந்து எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு அவற்றை வெட்டி விடுகிறோம். மரத்தை வெட்டுவது பாவம். இவ்வளவு தானே!!! கதை அதை மட்டும் சொல்லவில்லை. இந்த மரம் தான் நம் ஒவ்வொரு வரின் பெற்றோரும். சிறு வயதில் பெற்றோருடன் ஆடிப் பாடி மகிழ்கி றோம். வளர வளர அவர்களிடம் இருந்து கொஞ்சம கொஞ்சமாய விலகி நம் தேவை களுக்கு மட்டும் அவர்கள் முன் சென்று நிற்கிறோம. நாம் குடும்பம் ஆனதும் முழுவதுமாய் ஒதுங்கி, நமக்கு பிரச்சினை என்றதும், நம்மை காத்துக் கொள்ள மட்டும் அவர் களை எதிர்பார்க்கிறோம். பெற் றோர்கள் இந்த மரத்தை போன்றே நம் வரவிற்காக எப்போதும் ஏங்கு பவர்கள் தம்மால் இயன்றதை நமக்கு கொடுத்து நம் புன்ன கையில் அவர்கள் சந்தோசத்தை தேடுவார்கள்.



# பாடங்கள் ஓவியமாக....



(ராபர்ட் ரிப்ளே)

**உலகப் புகழ்பெற்ற ஓவிய மேதையாகத் திகழ்ந்தவர் ராபர்ட் ரிப்ளே. குழந்தைப் பருவத்திலேயே ஓவியம் வரைவதில் ஈடுபாடு கொண்டிருந்தார். பள்ளிக் கூடத் தில் எழுதச் சொல்லும் போது படங்களை வரைந்து கொண்டிருப்பார். ரிப்ளே படம் வரைவதை ஆசிரியர் ஒருவர் பார்த்து விட்டார்.**

**ரிப்ளேயின் ஓவிய ஆர்வத்தையும் வரைந் திருந்த நுணுக்கத்தையும் உணர்ந்த ஆசிரியர், எனக்கு எழுதிக் கொடுக்க வேண்டிய பாடங்களைப் படித்துப் பார்த்து ஓவியமாகவே வரைந்து கொடுத்துவிடு. அதனை நான் கட்டுரைகளாக ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.**

**இந்த ஊக்கமே பின்னாளில் ஓவியம் வரைய சம்பவங்களைத் தேடி 197 நாடுகளுக்கு அலைய வைத்துள்ளது. உலகின் எல்லாப் பகுதி களிலும் ரசிகர்களைக் கொண்டிருந்த ரிப்ளேவுக்கு 30 இலட்சம் கடிதங்கள் வந்திருந்ததாக இவரைப் பற்றிய குறிப்புகளில் காணப்படுகிறது.**

# உலகிலேயே குள்ள மனிதர்





உலகின் மிக உயரம் குறைந்த மனிதர் இவர்தான். இவரது பெயர் சந்திர பகதூர் டாங்கி (Chadra Bahadur Dangi) நேபாள நாட்டைச் சேர்ந்த இவருக்கு வயது 74. இவரது உயரம் ஒரு அடி 9அங் குலம் மட்டுமே ஆனால் இவரது குடும்பத்தில் உள்ள மற்ற அனைவ ரும். சராசரி உயரத்தில் உள்ளனர். 57ஆண்டுகால கின்னஸ் வரலாற்றில் இவரது உயரத்தில் இன்னொருவர் இதுவரை இல்லை என்பதுதான் இவருக்குக் கிடைத்த சிறப்பு நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவிலிருந்து 400 கி.மீ தொலைவில் உள்ள ஒரு சிற்றூரில் வசித்து வருகிறார் டாங்கி.



யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத்துறை மாணவர்களால் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கு வீதி விபத்து பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு அண்மையில் நடாத்தப்பட்டபோது... (90)

# பொது மக்களின் ஒத்துழைப்புடன் முழுமையான சேவையை வழங்குவேன்

## – வலி. தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் தெரிவிப்பு

எந்தவொரு சபைக்கும் இல்லாத பேரிடரை நான் சந்திக்க வேண்டியுள்ளது.

எனவே பொதுமக்கள் என்னுடன் பூரணமாக ஒத்துழைத்தால் அவர்களுக்கு முழுமையான சேவைகளை வழங்க நான் தயாராக உள்ளேன் என வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் சி.சி.மகேந்திரன் தெரிவித்தார்.

வலி. தென்மேற்கு கழிவு ஓயில் காரணமான குடிதண்ணீர் மற்றும் கல்லுண்டாய் வெளி திண்மக் கழிவு காரணமாக பேரிடர் இரண்டும் எமக்கு முன்னுள்ள சவால் எனும் தலைப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

திண்மக்கழிவுகள், எதனையும் எமது பிரதேசத்திற்குள் கொண்டு வந்து கொட்டாதீர்கள் என கூறிய போதும் எமது பிரதேசம் இன்று எல்லையற்ற கழிவுகளின் பிரதேசமாக மாறிவிட்டது. இன்று சட்டத்தின் முன் ஆராயப்படவுள்ளது.

அதேபோல சுன்னாகம் கழிவு ஓயில் எமது வலி. தென்மேற்கு பிரதேசத்தை ஆக்கிரமித்து விட்டது.

இதனால் திண்மக்கழிவு, கழிவு ஓயில் ஆகியன தொடர்பான கடிதங்கள் என்னை ஆக்கிரமித்த வண்ணம் உள்ளன.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்கள், அலுவலர்கள்,ஊழியர்கள் எமக்கு முழுமையான ஒத்துழைப்பை நல்கிவருகின்றனர்.

அதேபோல பொதுமக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கும் பட்சத்தில் மானிப்பாய் பிரதேச சபையின் அனைத்து வழங்களையும் முழுமையாக பிரயோகித்து மக்களுக்கு சுத்தமான குடி தண்ணீரை வழங்குவேன். என அவர் மேலும் தெரிவித்தார்.(92)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் குறுந்திரைப்பட விழா இன்று

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் பெருமையுடன் வழங்கும் குறுந்திரைப்பட விழா இன்று காலை 9 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளீதரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன், கௌரவ விருந்தி னராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவா னந்தராஜா, சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி ஜி.ரஜீவ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வின் வரவேற்புரை யினை உதவிப் பிரதேச செயலர் நேசகுமாரி செல்வரட்ணம் வழங்கவுள்ளார்.

குறுந்திரைப்படத்தை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்க திறனாய்வை ஈழத்து திரைப்பட திறனாய்வாளர் அ.ஜேசுராசா வழங்குவார்.

ஏற்புரையினை ஜே.ம.ஜோசப்மேரி (ஜோசித்தன்) வழங்குவதைத் தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறும். (48)

# பூநகரியில் இரு குளங்களின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்கு ஏற்பாடு





(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரியில் இருகுளங்களின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பூநகரிப் பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தெரிவித்தார். பூநகரி குடமுருட்டிக்குளத்தின் கீழ் 300 ஏக்கரிலும், கரியாலை நாகபடுவான் குளத்தின்கீழ் 500 ஏக்கரிலும் சிறுபோக நெற்செய்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சிறுபோக நெற்செய்கைக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய விதைப்பு, நீர் விநியோகம் என்பவற்றில் விவசாயிகள் சிறந்தமுறையில் செயற்படவேண்டும். நீர்ச்சிக்கனத்தைப் பேணுவதன் மூலமாகவே சிறுபோக நெற்செய்கையில் நிறைந்த வெற்றிகளை அடைந்து கொள்ளமுடியும். எனவே கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய விவசாயிகள் சிறப்பாகச் செயற்பட வேண்டுமெனவும் பூநகரிப் பிரதேசசெயலர் தெரிவித்தார்.(160)

# பதிவிருக்கப் பெட்டகம்

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இதுவரை நிகழ்ந்த மாற்றங்கள் எவை என்று பார்ப்போம். சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனரா? இராணுவ தேவைகளுக்காக கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களுக்கு சொந்தமான காணிகளில் ஒரு பகுதியாவது விடுவிக்கப்பட்டதா? இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டனவா? எல்லாவற்றுக்கும் இல்லை என்பதுதானே பதிலாக இருக்கிறது.

ஆட்சி மாற்றம் இடம்பெற்றவுடன் முதலாவதாக நடந்த மாற்றம் மகிந்தவினால் பறித்தெடுக்கப்பட்ட சரத் பொன்சேகாவின் குடியுரிமை மற்றும் இராணுவ ஜெனரல் பட்டம் ஆகியவை அவருக்கு வழங்கப்பட்டது. கோத்தாபயவிற்கு அஞ்சி நாட்டைவிட்டு வெளியேறிய இராணுவ அதிகாரிகள் அனைவரும் மீண்டும் இராணுவத்திற்குள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். ஆனால் புலிகளுக்கு மண்ணெண்ணை கொடுத்தார்கள், சீனி வாங்கிக் கொடுத்தார்கள் என்னும் பெயரில் கைது செய்யப்பட்டு, எவ்விதமான விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அதனை முன்னெடுக்க இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை. மக்களின் காணிகளை மீளவும் ஒப்படைக்க இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை.

அப்படியாயின் ஆட்சி மாற்றத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிய கூட்டமைப்பின் தலைவர்கள் இதற்கு பதில் சொல்லும் பொறுப்புடையவர்கள் இல்லையா? இந்த ஆட்சி மாற்றத்தினால் எங்களுக்கு கிடைத்த நன்மை என்ன என்று கேள்வி கேட்பதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரித்து இல்லையா? சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கே தடுமாறும் ஒரு அரசாங்கமா உள்ளக விசாரணையின் மூலம் குற்றவாளிகளை தண்டிக்கப்போகிறது? மேற்படி கேள்விகள் அனைத்திற்கும், இந்தப் புதிய அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிய கூட்டமைப்பின் தலைவர்களின் பதில் என்ன?

– யதீந்திரா

நம்முடையதை விடப் பெரிய படுகொலைகளெல்லாங் கண்டுங் காணாமற் போகிற ஒரு உலகச் சூழலில் வாழ்கின்றோம். விசாரணையின் நோக்கம் பாதிக்கப்பட்டோரை பற்றியதல்ல. அப்பாதிப்புக்குக் காரணமானவற்றைக் கண்டறிவதல்ல. எந்தப் பிரச்சினையையும் தீர்ப்பதல்ல. அது ராஜபக்ஷவையும் அவருடைய ஆலோசகர்களையும் படையினரையும் விசாரித்துத் தண்டிப்பதை பற்றியதுமல்ல. இவற்றையெல்லாம் நானும் வேறு சிலரும் தொடக்கத்திலிருந்தே பல்வேறு சூழ்நிலைகளில் நினைவூட்டி வந்துள்ளோம்.

ஆனாலும் அமெரிக்காவைப் பற்றிய நப்பாசை தமிழ்த் தேசியவாதிகட்கு மட்டும் இருக்கவில்லை. யார் குற்றியாவது அரிசியானாற் சரி என்று யோசிக்கிற திசை தடுமாறிய இடதுசாரிகள் சிலருக்குமிருந்தது. ராஜபக்ஷவைத் தண்டித்தாற் போதும் என்று வாதிக்குமளவுக்குச் சிலருடைய அரசியல் ஞானம் வற்றிக்கிடந்தது.

சர்வதேச விசாரணை என்பது ராஜபக்ஷவுக்கெதிரான நெருக்குவாரம் மட்டுமே என்பது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பலருக்கும் விளங்கிய விடயம். ஒரு தமிழ்த்தரப்பு சர்வதேச சமூகம் எப்படியாவது விசாரணையை நடாத்தித் தீர்வை வழங்கியே தீரும் என்று விடாப்பிடியாக சொல்லி வந்தது. இப்போதும் ஏதாவது வகையில் விசாரணை நடக்கும். நடக்காவிட்டாலும் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்று கனாக்காட்டி வருகிறார்கள். அவர்களுக்கும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் பற்றிய கவலை.

– கோகர்ணன்

பேரினவாதம் தலைதூக்குவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். சுயநல அரசியலும் ஒரு காரணம். பேரினவாதத்துக்கு எதிரான போராட்டத்தைக் கூர்மையுடன் முன்னெடுத்திருக்க வேண்டிய இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகள் வி[illegible] வரலாற்றுத் தவறு ஒரு புறத்திலும் தமிழ்த் தலைமைகளின் [illegible]வாத அரசியல் மறுபுறத்திலுமாகப் பேரினவாதத்தின் துரித வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்திருக்கின்றன.

யதார்த்தத்துக்கு முரணான தீரவுக் கோரிக்கையை முன்வைத்துச் செயற்பட்டதும், நடைமுறைச் சாத்தியமற்ற எதிர்பார்ப்புகளை மக்களிடம் வளர்த்ததும், தெற்கில் பேரினவாதம் வளர்வதற்குத் துணை போயிருக்கின்றன என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது. தமிழ் அரசியலில் இந்தப் போக்கை இன்றும் அவதானிக்க முடிகின்றது.

இனப்பிரச்சினைக்குச் சர்வதேச சமூகம் ஒருபோதும் தீர்வைப் பெற்றுத் தரப்போவதில்லை. தனிநாடு அமைப்பதற்கு எந்தவொரு வெளிநாடும் கைகொடுத்து உதவப் போவதில்லை. போராட்டத்தின் மூலம் தனிநாடு அமைக்க முடியாது என்பதை அனுபவத்தில் பார்த்து விட்டோம். ஐக்கிய இலங்கையில் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு. சிங்கள மக்களின் ஆதரவுடனேயே அது சாத்தியமாக முடியும். இதுதான் யதார்த்தம். இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு அதற்கேற்றவாறு அரசியல் நகர்வை முன்னெடுப்பது பேரினவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய இடம் வகிக்கும்.

– சிவா சுப்பிரமணியம்

# உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் நெருக்கடி

கிளிநொச்சி மாவட்டத்தின் பின் தூங்கிய கிராமங்களில் உள்ள குடும்பங்கள் தமது வருமானத்தின் பொருட்டு மேற்கொண்டு வரும் உள்ளூர் உற்பத்தப் பொருட்களை உரிய முறைகளில் சந்தைப் படுத்த முடியாதுள்ளதாக கூறுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மீள்குடியேறி வாழ்ந்து வரும் குடும்பங்கள், தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு குடிசைக் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களது உற்பத்திப் பொருடகளை உரியமுறையில் சந்தைப்படுத்த முடியாதுள்ளதாக தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி கோணாவில் புதிய குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் 64 வயதுடைய தங்கராசா தர்மகுலசிங்கம் என்பவர் 1979 ஆம் ஆண்டில் இருந்து தனது வாழ்வாதாரத்துக்காக தும்புத்தடி, விளக்குமாறு என்பவற்றை உற்பத்தி செய்து வரும் அதேநேரம், பண்ணை வேலைகள் மூலம் கைப்பணிப் பொருட்களையும் உற்பத்தி செய்து வருகின்றார்.

இவற்றை உரிய விலைக்கு சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் அவற்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவது வரையும் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி அக்கராயன் கிழக்கு பகுதியில் வசித்து வரும் சுரேந்திரன் லோகினி (வயது 32) என்பவர் தனது குடும்ப வருமானத்துக்காக தையல் வேலைகளுடன் நான்கு பேருக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் வகையில் சிறிய கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றார்.

இருந்தபோதும் அவற்றை சந்தைப்படுத்த முடியாமல் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக கூறுகின்றார்.

தனது உற்பத்திப் பொருட்களை மாவட்டத்துக்குள் சந்தைப் படுத்தக்கூடிய வசதிகள் இருந்தால் தமக்கு வசதியாக இருக்கும் என்றும் தற்போது அவற்றை கொழும்பு வரைக்கும் கொண்டு செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தலைவர்கள் சனியன்று சந்திப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

தற்போதைய மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கும் நோக்கில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை இந்தச் சந்திப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது. கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு முன்னதாக அன்றைய தினமே, கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த இந்தச் சந்திப்பு பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளார். பொதுத் தேர்தலில் போட்டியிடுதல், தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கட்சித் தலைவர் கூட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது கட்சிகளுக்கு இடையில் நிலவி வரும் முரண்பாடுகளை களைவது தொடர்பிலும் இந்த சந்திப்பில் ஆராயப்பட உள்ளதாக சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# திருக்கேதீஸ்வரம் - தலைமன்னார் ரயில் பாதை புனரமைப்பு நிறைவு

திருக்கேதீஸ்வரம் தொடங்கி தலைமன்னார் ரயில் தரிப்பிடம் வரையிலான வேலைத்திட்டம் நிறைவடையும் நிலையை எட்டியுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கைக்கு வரும் இந்திய பிரதமர் நரேந்திரமோடி மறுநாள் 14 ஆம் திகதி மன்னாருக்கு வருகைதரவுள்ள நிலையில் சுமார் 26 வருடங்களுக்கு பின்பு மதவாச்சியில் இருந்து தலைமன்னாருக்கான புகையிரத சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

தற்போது மதவாச்சியிலிருந்து மடு வரை புகையிரத சேவைகள் இடம்பெற்று வரும் நிலையில் எதிர்வரும் 14 ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடி மதவாச்சியிலிருந்து தலைமன்னாருக்கான புகையிரத சேவையினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

1990 ஆம் ஆண்டிற்கு பின்னர் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக தெற்கிலிருந்து வடக்கிற்கான புகையிரத சேவைகள் இடை நிறுத்தப்பட்டன. யுத்தம் காரணமாக புகையிரத பாதைகள, புகையிரத நிலையங்கள் சேதப் படுத்தப்பட்டன.

சுமார் 26 வருட காலமாக மதவாச்சியிலிருந்து மன்னாருக்கான புகையிரத சேவைகள் தடைப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மீண்டும் 26 வருடங்களின் பின்னர் மதவாச்சியிலிருந்து மன்னார் ஊடாக தலைமன்னாருக்கான புகையிரத சேவைகள் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளன.

இந்த நிலையில் மதவாச்சியில் இருந்து மன்னார் திருக்கேதீஸ்வரம புகையிரத நிலையம் வரையிலான புகையிரத பாதைகள் மற்றும் தரிப்பிடங்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

திருக்கேதீஸ்வரம் புகையிரத் நிலையத்தில் இருந்து தலைமன்னார் புகையிரத தரிப்பிடம் வரையிலான வேலைத்திட்டங்கள் தற்போது முடிவடையும் நிலையில் உள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

# வடக்கு பயணத்தை இலகுபடுத்த இரு வழி ரயில் பாதை



வடக்கு ரயில் மார்க்கத்தில் குருநாகலிலிருந்து பொல்ஹாவல வரையான ரயில் பாதையை இருவழி ரயில் போக்குவரத்துத் தடமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. வடக்கு ரயில் மார்க்கத்தில் குருணாகலிலிருந்து பொல்ஹாவலை வரையான பகுதியில் காணப்படும் ரயில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதே இதன் பிரதான நோக்கம் என ரயில்வே திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் விஜய அமரதுங்க தெரிவித்தார். வடக்கு ரயில் மார்க்கத்தில் தொடர்ச்சியாக அதிகளவான ரயில்கள் போக்குவரத்து செய்வதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். வடக்கு ரயில் மார்க்கத்தில் கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப் பாணத்திலிருந்து கோட்டை புகையிரத நிலையத்திற்கும் பயணிக்கும் ரயில்கள் காரணமாக இந்த மார்க்கத்தில் ரயில் போக்குவரத்து நெரிசல் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக குருநாகலிலிருந்து பொல்ஹாவல வரையான ரயில் பாதையை இருவழி ரயில போக்குவரத்துத் தடமாக மாற்றுவதற்கு ரயில்வே திணைக்களமும்; போக்குவரத்து அமைச்சும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். இருவழி தடத்தினை அமைப்பதன் மூலமாக வடக்கு ரயில் மார்க்கத்தில் காணப்படும் ரயில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்கு முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இராவணன் புஷ்பக விமானத்தை நிறுத்தி ஓய்வு எடுத்த இடம் கண்டுபிடிப்பு





இராணவன் தனது புஷ்பக விமானத்தை நிறுத்தி ஓய்வெடுத்ததாக கூறப்படும் இடம், மத்திய மலைநாட்டில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இராமாயணத்தில் இராவணனுக்கு புஷ்பக விமானம் ஒன்று இருந்ததாக கூறப்பட்டுள்ளது. சீதையை மறைத்து வைத்த இடம் எனக் கூறப்படும் நுவரெலியாவில் உள்ள சீதா எலிய பற்றியும் அதில் கூறப்பட்டுள்ளது.


சீதாஎலிய கோவிலில் தற்போது இந்துக்கள் வழிபட்டு வருகின்றனர். சீதையை கடத்தி வர பயன்படுத்திய புஷ்பக விமானம், இராவணன் நிறுத்தி ஓய்வெடுத்ததாக கூறப்படும் இடம் ஒன்றில் தோட்டத் தொழிலாளர்கள் பூஜை வழிபாடு செய்து வருகின்றனர்.

மஸ்கெலியா, மவுசாகலை நீர்தேக்கம் மற்றும் கெனியோன் நீர் மின் நிலையத்திற்கு மேல் ஐந்து கன்னிமார் மலைக்கு அருகில் மவுசாகலை நய்சா தோட்டத்தின் கீடன் பிரிவில் சுமார் மூன்று ஏக்கர் பரப்பிலான கற்பாறையாக இந்த இடம் காணப்படுகிறது.

அந்த கற்பாறையில் சில அடையாளங்கள் காணப்படுகின்றன. அவை இராவணனின் புஷ்பக விமானத்தின் சில்லுகளின் தடங்கள் என தோட்டத் தொழிலாளர்கள் நம்புகின்றனர். சமதரையான இந்த கற்பாறைக்கு அருகில் தடாகம் ஒன்றும் காணப்படுகிறது.

சில வருடங்களுக்கு முன்னர் இந்த தடாகம் பெரியதாக காணப்பட்டதாகவும் அது பராமரிக்கப் படாத காரணத்தினால், சிறியதாக மாறியுள்ளது எனவும் அவர்கள் கூறுகின்றனர். இராவணனின் புஷ்பக விமானம் பாதரசத்தினால் இயங்கியதாக வரலாறு கூறுகிறது. இந்த கற்பாறை சிவனொளி பாத மலைக்கு அருகில் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# பரமர் சங்கமம்



சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப போம் எனப் பாடினார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆக எமது நாடு ஒரு தீவாகவே விளங்குகிறது. இன்னும் சில கவிஞர்கள் இந்து சமுத்திரத்தின் முத்து. மாங்கனி வடிவ மரகதத்தீவு என்டெல்லாம் புகழ்பாடிப் போயுள்ளனர்.

அதேவேளை அந்தத் தீவினுள்ளும் இன்னும் பல தீவுகள் உண்டு. அதெல்லாம் வடக்குக் கிழக்குகளில் அமைந்துள்ளன. அதிலும் வடபகுதியில் அனந்தம் என்றால் முடிஞ்ச வரை நினைவுபடுத்திறன் கச்சதீவு. நெடுந்தீவு. நயினாதீவு, அனலைதீவு. எழுவைதீவு. காரைதீவு இப்ப இது காரைநகராக மாறிவிட்டது.

சிறுத்தீவு. முல்லைத்தீவு. மண்டைதீவு. பாலைதீவு கற்கடதீவு. இரணைதீவு. புங்குடுதீவு இப்புடித் தீவெண்ட பெயர் பெறாத பூநகரி. வேலணை. குறிகட்டுவான். ஊர்காவற் றுறை போன்றன கடலேரியில் தாம்போதிகள் நிறுவி வீதி கள் போட்டும் நகருடன் இணைக்கப்பட்டும் விட்டன.

எண்டாலும் நயினாதீவு. பாலைதீவு. கச்சதீவு யாத்திரைத் தலங்கள் அமைந்துள்ளதால் வருடா வருடம் ஏனைய இடங்களால் மக்கள் அந்தத் தீவுகளுக்குச் சென்று வாறதாலை புதிப்பிக்கப்பட்டும் வந்துள்ளது. இதிலை பாலைதீவும், கச்சதீவும் யேசுக்கிறிஸ்துவின் தவக்காலங்களில் நடக்கும்.

தவக்காலங்களை திருநூற்றுப் புதன் தொடங்கி அடுத்து வரும் வெள்ளிக்கிழமைகளை மையப்படுத்தி ஏழு வெள்ளிக் கிழமைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. ஏழாம் வெள்ளியே பெரியவெள்ளி எனப்படும். முன்னமெல்லாம் பாலைதீவு திருநாளே முதலில் வரும். நாலாம் கிழமை வந்து முடியும். ஐந்தாம் கிழமைதான் கச்சதீவுத் திருநாள் நடக்கும்.


முப்பதாண்டு அனர்த்தம். இடபெயர்வுகளை அடுத்து அரசால் இரண்டாம் கிழமை கச்சதீவும் மூண்டாம் கிழமை பாலைதீவும் நடைபெறுவது வழக்கமாக விட்டுது. நேற்றுத்தான் [08.03.2015] பாலைதீவுப் பெருநாள் முடிஞ்சு சனம் திரும்பிக கொண்டிருக்கு. போனகிழமை கச்சதீவுப் பெருநாள் நடந்து முடிஞ்சிட்டுது.

இம்முறை கச்சதீவுப் பெருநாளோடை தமிழ்நாட்டு அரசு கடும்புடி புடிச்சிட்டுது. அங்கை போயிருக்கிற இலங்கை அகதிகளை திருநாளில் கலந்துகொள்ள விடாமல் தடுத்திச்சு அங்கை இருந்து வந்த ஈழ அகதி இளைஞனொருவன் கள்ளத் தனமாக கச்சதீவுள் நுழைய முற்பட்டதாகக் குற்றஞ்சாட்டி சிறையில் தள்ளியுள்ளதாகவும் ஊடகங்களில் பாக்க முடிஞ்சுது. இதுமட்டுமே எங்கட நாட்டு பொலிஸ்காரரும் கடலில் வீழ்ந்து மரணித்ததாகவும் செய்திகள் கூறின.


இப்பெல்லாம் முத்தியைப் போலை கச்சதீவுப் பிரயாணம் சுவையாக அமையிறேல்லை. ஏனெணடா நாங்க போகேக்கை தேங்காய், டோச்லைட், சாராயம். தேங்காயெண்ணை டின்னெண்டு கொண்டு போய்க் குடுத்திட்டு சாரம். சாறி. பெற்சீற். துவாய் லுங்கியெண்டு உடுபுடவையளைப் பண்டமாத்தா வாங்கி வருவம். அதாலை போறவாற செலவேம் தாக்காட்டும். இப்ப அதெலலாம் அங்கை மதிப்பில்லாமல் போச்சு. இனி அங்கயிருந்து பொம்புளை வர இஞ்சை இருந்து மாப்புளை போய்க கல்யாணம் கட்டுவோம். அடுத்த நாள் விடிஞ்சு வெளிக்கிடேக்கை பிரிவுத் துயரில் கண்ணீர் விடுறவேம்.

அங்கை அப்ப குடிவகை இல்லாததால நாங்க கொண்டு போய் பண்டமாத்துச் செய்த சாராயத்தைக் குடிச்சுப்போட்டு கச்சதீவுக் கடற்கரை மண்ணில் புரண்டு கிடக்கிற வேயையும் இனி எப்பதான் காணப்போறம் சொல்லுங்க பாப்பம்...

60.




61. இம்மெழுகுதிரிகள் ஒரு குறித்த இயல்பு தொடர்பாக ஒழுங்குபடுத்தி வைத்தால் கிடைக்கத்தக்க விடை யாது?




01. CBDA    02. BACD    03. DBCA

62. உடைந்த ஒரு வரைகோலின் 4 பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன




வரைகோலை ஆக்குவதற்கு சரியாகப் பொருத்த வேண்டிய விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க

01. 4213    02. 2431    03. 3142

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1. கடிக்கும் 2. விராண்டும் 3. முட்டும் 4. கொத்தும் 5. உதைக்கும்
(02).6. ஆபத்தான 7. தடுப்பூசி 8. மென்மையானது 9. நன்மைகளைப் 10. உடலைச்
(03).11. பாதுகாப்பு 12. காணி உழுவதற்கு 13. பால் தரும் 14. முட்டை தரும்
15. சுமையை தாங்குவதற்கு 16. பாரம் தூக்கும் 17. ஓட்டபந்தயத்திற்கு
18. எலி பிடிக்கும் (04).19. கடித்தல், பூனைவிராண்டுதல், மாடு முட்டுதல்
20. கட்டிவைத்தல், சுத்தமாக வைத்திருத்தல், தடுப்பூசி போடுதல் 21. உணவுஉண்ணாமை, சோர்வு, மயிர்கொட்டுதல் 22. நன்றியுள்ளதாக இருக்கும், பாதுகாப்பு, பொழுதுபோக்கு 23. வாலாட்டும், பாயும், கௌவும் 24. நாய் - இனந்தெரியாதவர்களை கண்டால் கடிக்கும் 25. பூனை - வாலை மிதித்தால் கடிக்கும் (05).26. வீட்டுப்பிராணிகள் - நாய், பூனை, மாடு, ஆடு,
வீட்டுச்சூழலில் வளர்க்கும் பிராணிகள் - கோழி, புறா, கிளி, மைனா, எருமை, முயல்
நோய்க்காவிகள் - தெள்ளு, பேன், உண்ணி, நுளம்பு, ஊர்ந்து திரிவன - பாம்பு, மட்டைத்தேள், அட்டை, மண்புழு (06). 30. பார்த்தல் 31. மணத்தல் 32. கேட்டல் 33. சுவையை அறிதல்
34. கதைத்தல் 35. உணர்தல் (07).36. 2 37. 2 38. 1 39. 1 40. 2 41. 1
42. 1 43. 1 44. 3 (08).45. சேட் 46. சட்டை 47. அலுமாரி 48. புத்தகப்பை 49. மேளம்
50. கடிகாரம் 51. ரயர் 52. கத்தரிக்கோல் (09).53. பிழை 54. சரி 55. சரி 56. சரி
57. சரி (10).58. வெண்கட்டி 59. சலவைத்தூள் 60. அலுமாரி 61. இரும்பு
62. புத்தகம் (11).63. துடைத்தல் 64. உடை 65. உலோகத்தினால் 66. சுத்தமாக
67. சவர்க்காரம் (12).68. 3 69. 3 70. 3 71. 2 72. 1 73. 2 74. 2
75. 1 76. 4 (14).77. கத்தரிக்காய் 78. வாழைப்பழம் 79. அப்பிள் 80. வெங்காயம்
81. வெண்டிக்காய் 82. மாம்பழம் 83. அன்னாசி 84. மீன்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்

# கல்வி முரசு



(01) பின்வரும் சுருக்க குறியீடுகளின் விரிவாக்கத்தை எழுதுக
01. இ.ஒ.கூ. :- ........................................
02. இ.ம.வ :- ........................................

(02) பின்வரும் பழமொழிகளை ஒழுங்குபடுத்தி எழுதுக
03. அடி / அம்மியும் / அடித்தால் / அடிமேல் / நகரும்
........................................
04. பறந்தாலும் / ஊர்க்குருவி / பருந்தாகுமா / உயர / உயர
........................................

(03) பின்வரும் வினாக்களின் விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக
05. மாவின் பிஞ்சு வடு என்பது போல பலாவின் பிஞ்சு : ........................
06. வாழையின் இளையது குட்டிபோல நெல்லின் இளையது : ........................



(04) பின்வரும் ஆங்கில சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக
07. pine apple : ........................ 08. Table cloth : ........................

(05) பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலப்பதத்தை எழுதுக
09. வகுப்பறை : ........................ 10. வைத்தியசாலை : ........................




(06) பின்வரும் சிங்களச்சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக
11. கெசெல் : ........................ 12. (B) பண்டக்கா : ........................

(07) பின்வரும் சொற்களுக்குரிய சிங்களச்சொல்லை தமிழ் உச்சரிப்பில் எழுதுக
13. புத்தகம் : ........................ 14. கரும்பலகை : ........................

(08) பின்வரும் பிராணிகளின் பெயர்களை எழுதுக

15.  ..................
16.  ..................
17.  ..................
18.  ..................

(09) பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளவற்றின் பயன்பாட்டை எழுதுக

19.  ..................
20.  ..................
21.  ..................
22.  ..................

**(10) 23 - 37 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கிறிடுக**

**23.** பின்வருவனவற்றில் எது இலங்கையின் அரச இலச்சினையில் இல்லாதது எது?
(1) நெற்கதிர் (2) தர்மசக்கரம் (3) யானை உருவம்

**24.** பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும் மிருகம் எது?
(1) பண்டா (2) ஒட்டகம் (3) கங்காரு

**25.** இலங்கை குடியரசான ஆண்டு எது?
(1) 1972 (2) 1948 (3) 1960

**26.** உலகில் மிகப்பெரிய நதி எது?
(1) நைல்நதி (2) மகாவலிகங்கை (3) மிசிசிபி

**27.** பின்வருவனவற்றில் மாலை நேரத்தில் மலரும் பூ எது?
(1) தாமரை (2) மல்லிகை (3) சூரியகாந்தி

**28.** 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற தலைநகரம் எது?
(1) எதென்ஸ் (2) பீஜிங் (3) லண்டன்

**29.** உலக தொழிலாளர் தினம் கொண்டாடப்படும் தினம் எது?
(1) மே 1 (2) ஏப்ரல் 23 (3) ஒக்ரோபர் 06

**30.** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய் எது?
(1) மாலைக்கண் (2) கண்டமாலை (3) என்புருக்கி

**31.** காந்தத்தின் எதிர்முனைவுகளை அருகில் கொண்டு செல்லும்போது நிகழக்கூடியது எது?
(1) கவரும் (2) தள்ளும் (3) மாற்றம் நிகழாது

**32.** காற்றுத்திசையை அறியப்பயன்படும் கருவி எது?
(1) திசைகாட்டி (2) காற்றுத்திசைகாட்டி (3) காற்றுவேகமானி

**33.** டேவிட் / தாவீது எனும் இயற்பெயரை கொண்டவர் யார்?
(1) T.P. ஜெயா (2) வண.எஸ்.மகிந்த (3) கொங்காலேகொட பண்டா

**34.** சூடான இரும்பை பிடிக்க உதவுவது எது?
(1) இடுக்கி (2) சுத்தியல் (3) முடிதிறப்பான்

**35.** பின்வருவனவற்றுள் கூட்டிலையாக அமைவது எது?
(1) செவ்வரத்தை (2) பூவரசு (3) கிளிசரியா

**36.** துருத்தி பயன்படுத்தப்படும் இடம் எது?
(1) தச்சுவேலை செய்யுமிடம் (2) சட்டிபானை செய்யுமிடம்
(3) இரும்புவேலை செய்யுமிடம்

**37.** இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
(1) சோமசுந்தரப்புலவர் (2) மு.நல்லதம்பி (3) ஆனந்தசமரக்கோன்

**(11) பின்வரும் அட்டவணையை கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க**

| விரும்பும் பழம் | ஆண் | பெண் |
|---|---|---|
| மாம்பழம் | 25 | 35 |
| பலாப்பழம் | 30 | 35 |
| வாழைப்பழம் | 20 | 15 |
| அப்பிள் | 40 | 25 |
| அன்னாசி | 35 | 40 |

**38.** சம எண்ணிக்கையானோர் விரும்பும் பழங்கள் எவை?
..............................................

**39.** கூடுதலானோர் விரும்பும் பழம் எது?
..............................................

**40.** வாழைப்பழத்தை விரும்பும் ஆண்களுக்கும் மாம்பழத்தை விரும்பும் பெண்களுக்கும் இடையேயான வித்தியாசம் யாது?
..............................................

**41.** அன்னாசியை விரும்புவோரின் மொத்த எண்ணிக்கை யாது?
..............................................


**42.** பழங்களை விரும்பும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?
..............................................





**44.** 1. 3 பென்சில்களின் விலை 10 ரூபாய் எனின், 9 பென்சில்களின் விலை யாது?
..............................................

2.




உருவத்தின் சுற்றளவு யாது? ..............................

**45.** 4.75L ஐ ml இல் தருக? ..............................

**46.** 0.75, 1/2, 1/4, 1/5 இவற்றில் பெறுமதி கூடியது எது?
..............................................

**47.** ஒரு கூடையினுள் 194 மாம்பழங்கள் உள்ளன. இவற்றில் 14 மாம்பழங்கள் அழுகிவிட்டன. அழுகியவை தவிர மீதியாக உள்ள மாம்பழங்கள் அனைத்தும் சமமாகப் பிரிக்கப்பட்டு மூன்று பைகளில் இடப்பட்டன. எனவே, ஒருபையிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
..............................................

**48.** சப்பாத்து ஒன்றை வாங்கிய கபிலன் 1000 ரூபாவை கடைக்காரனிடம் கொடுத்த பொழுது கடைக்காரன் 340 ரூபாவை மீதியாக கொடுத்தான். அப்படியாயின் சப்பாத்தின் விலை என்ன?
..............................................

**49.** ஒரு கடிகாரத்தில் 11 என்ற இலக்கத்தினால் எத்தனை நிமிடம் காட்டப்படுகிறது?
..............................................

**50.** கிரி, கபி,பிரி என்பவர்களின் நிறைகளின் சராசரி 30kg, கிரி,கபி என்பவர்களின் நிறை 55kg எனின், பிரியின் நிறை யாது?
..............................................

**51.** ஒருவருக்கு 400g பாண்வீதம் 27 பேருக்கு கொடுப்பதற்கு எத்தனை Kg பாண் தேவை?
..............................................

**52.** 300g சீனியின் விலை 25ரூபா 3kg சீனியின் விலை என்ன?
..............................................

**(12)** நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் ..... என்னும் தலைப்பில் 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொன்றும் 5 சொற்களுக்குக் குறையாத வாக்கியங்களாக அமைய வேண்டும்

53. ..............................................

54. ..............................................

55. ..............................................


56. ..............................................

57. ..............................................

58. ..............................................

**(13) 59ஆம், 60 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிக**

59.



# வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்கு சட்ட விதிமுறை பின்பற்றப்பட வேண்டும்

## சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதி விபத்துக்களை தடுப்பதற்கு வாகனச்சாரதிகள் வீதி நடைமுறையை சரியாக பின்பற்ற வேண்டும் எனவும் அதன் மூலமே வீதி விபத்தை தடுக்க முடியும் என கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்து பொலிஸ பிரிவு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

குறிப்பாக ஏ-9 வீதியூடாக கனரக வாகனங்களில் செல்வோர் உரிய வகையில் சாரதி அனுமதிப்பத்திரம் வரி அனுமதிப் பத்திரம் இல்லாமல் பயணத்தை மேற்கொள்கின் றனர்.

இது சட்டவிதிமுறைக்கு முரணானது மட்டுமன்றி இத்தகைய செயற்பாடுகளாலேயே விபத்துக்கள் இடம்பெறுவதற்கு வழி சமைப்பதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் வாகன சாரதிகளின் இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகளால் பாதிக்கப்படுவது சாரதிகளே குறிப்பாக உரிய ஆவணங்கள் இன்றி பயணிக்கும் வாகன சாரதிகளை பொலிஸார் மறித்து சோதனை செய்யும் போது ஆவணங்கள் இல்லாதுவிடின் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டம் அறவிடப்படுகிறது.

இத்தகைய நடவடிக்கை தேவையா? உரிய வகையில் ஆவணங்களை வைத்திருந்தால் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தில் பயணத்தை மேற்கொள்ளும் வாகன சாரதிகள் பொதுமக்களுக்கு இடையூறை ஏற்படுத்தாது தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் வாகனங்களுக்கான உரிய ஆவணங்களை பெற்று வைத்திருக்க வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்துகின்றனர்.

(77)

# பேருந்து தரிப்பிடம் இல்லை சிரமத்தில் பொதுமக்கள்



முல்லைத்தீவு நகரத்தில் பேருந்துத் தரிப்பிடங்கள் முக்கியமான இடங்களில் அமைக்கப்படாததன் காரணமாக பயணிகள் மரநிழலின் கீழும் வெயிலிலும் நீண்டநேரம் நின்றவாறு பயணிக்கவேண்டிய அவலம் காணப்படுகின்றது.

மாவட்டத்திற்குள்ளும் பிற மாவட்டங்களுக்கும் நாள்தோறும் பலபேருந்து சேவைகள் நடைபெறும் நிலையில் பயணிகளுக்கான பேருந்துத் தரிப்பிடங்கள் முக்கியமான இடங்களில் இல்லாததன் காரணமாக பயணிகள் நாள்தோறும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக பேருந்து தரிப்பிடம் இல்லாததால் பாடசாலை மாணவர்கள், வேலை செல்வோரே அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் அவசியம் பேருந்து தரிப்பிடம் அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

(160)

# சங்காபிஷேகம்

மாவிட்டபுரம் தெற்கு கம்பன் சீமா ஸ்ரீ ஞான வைரவர் ஆலய 1008 சங்காபிஷேக பெருவிழா மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷ.இரத்தின சபாபதிக் குருக்கள் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 6.30 மணி முதல் 2 ஆம் காலயாக பூசைகள், விசேட திரவ்விய ஹோமம, மகா பூர்ணாகுதி, தீபாராதனை என்பன இடம்பெற்று மு.ப10 மணிக்கு மஹா அபிஷேகம் 11 மணிக்கு கும்பங்கள் புறப்பாடு சங்காபி ஷேகம் என்பன இடம்பெறும் பின்னர் நண்பகல் 12.30 மணிக்கு உச்சிக்கால பூசை மகேஸ்வர பூசை என்பன இடம் பெறவுள்ளன.

இரவு 10 மணிக்கு மாவையூர் மடத்தடி ஸ்ரீ காளி அம்மன் நாடக மன்றம் பெருமையுடன் வழங்கும் மாலைக்காக வாதாடி மைந்தன் (காத்தவராயன்) சிந்து நடைக்கூத்தும் இடம் பெறவுள்ளது.

(85)

# தெல்லிப்பளை கோட்டமட்ட தமிழ்த்தின போட்டி முடிவுகள்

**வலிகாமம் வலய தெல்லிப்பளை கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.**

**மாணவர்களின் விபரம் வருமாறு, — — — — — — — —**

**எழுத்து ஆக்கம்**

பிரிவு-I

த.மதுமிலா (யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி க.வித்தியாலயம்), தே.சிந்துஜன் (யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி), சு.சியானிஷன் (யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க)

**கட்டுரை வரைதல்**

**பிரிவு-II**

ஜெ.டிலான்சன் (யா/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்), யேசு யசித் (யா/அளவெட்டி சதானந்தா), ச.சுபஸ்திகா (யா/யூனியன் கல்லூரி), உ.கம்சாயினி (யா/அருணோதயாக் கல்லூரி)

**கட்டுரை வரைதல**

**பிரிவு-III**

இ.மிதுலா-யாழ்.அருணோதயாக் கல்லூரி, சி.வின்சிகா, (யா/இளவாலை மெய்கண்டான் ம.வி), இ.மதிஸ்ரா (யாழ்/நடேஸ்வராக் கல்லூரி)

**தமிழியல் கட்டுரை, வரைதலும், இலக்கிய நயத்தலும்**

பிரிவு-IV

செ.ஜசிந்தா (யா/வயவிளான் மத்திய மகாவித்தியாலயம்), ப.திவியா (யா/அருணோதயாக் கல்லூரி), ச.கபிலதாஸ் (யா/கீரமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்) (தொடரும்..) (17)

# வகுப்பறைக்கட்டடம் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் சண்முகரட்ணம் வித்தியாலயத்தின் வகுப்பறைக்கட்டடம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வித்தியாலய முதல்வர் தா.தயாகரன் தலைமையில் அண்மையில் இடம் பெற்ற நிகழ்வில் 100 அடி நீளமுடைய வகுப்பறைக்கட்டடம் 80 இலட்சம் ரூபா நிதியில் நிர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா கலந்து இதனை திறந்து வைத்துள்ளார்.

இந்நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர்களான உ.ரவிகரன் சி.சிவமோகன் ம.அன்ரனி ஜெகநாதன் திருமதி மேரி கமல குணசீலன் முல்லைத்தீவு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி உதயராணி முனிஸ்வரன் துணுக்காய் பிரதேச செயலாளர் தே.குணபாலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(40)





யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் மாற்றுத் திறனாளியான பெண்ணொருவர் பனம் பொருள் கைப்பணியில் சாதனை படைத்தமைக்காக சுவிற்சர்லாந்தின் இலங்கைத் தூதரக முதன்மை செயலாளர் கெய்நைனா போரர் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் மகளிரையும் காணலாம்.

(படங்கள்-ஆர்.இராஜகுமார்)

# முரசின் இன்றைய பலன்

**10.03.2015 செவ்வாய்க்கிழமை**

ஜய வருஷம் மாசி மாதம் 26 ஆம் திகதி.
சித்தயோகம்- சதுர்த்தி திதி
சுவாதி நட்சத்திரம் மு.இரவு-07.53 வரை. பின் விசாகம்
இராகு நேரம்-03.23-04.53 வரை சுபநேரம் 10.53 -12.23 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — வாக்குக்கலகம் பொறுமையினால் சமரசமடைதல்

**ரிஷபம்** — காசோலைகள் பணமின்றித் திரும்பும் துயர்வாட்டுதல்

**மிதுனம்** — பெட்டிப்பாம்பாக அடங்கி இருக்க விரும்பாதிருத்தல்

**கடகம்** — மாமனுடன் பணம் சம்பந்தமாக உறவில் விரிசல் ஏற்படல்

**சிம்மம்** — பழுதடைந்த பண்டத்தினால் தேக சௌக்கியம் குன்றுதல்

**கன்னி** — நிலுவை கூடியதால் தொடர்புகள் தற்காலிகமாக துண்டிப்பு

**துலாம்** — செல்லாத பண நோட்டு திணிக்கப்படல்

**விருச்சிகம்** — கௌரவப் பதவி கிடைக்க பிரமுகர் உதவிடல்

**தனுசு** — முகவரின் திருவிளையாடலால் பயணம் கானல்நீராகுதல்

**மகரம்** — முகப்புத்தக மூலம் விவாகத்திற்கு ஏற்ப வரனைத் தேடுதல்

**கும்பம்** — நண்பரின் உதவியால் வெளியூர் பயணத்திற்கான செய்தி கிட்டுதல்

**மீனம்** — ஆவணம் பிழையான தகவலைக் கொண்டிருந்தமை காரணமாக பயணம் இழுபடல்

# கலாசார அடையாளங்கள் அழிக்கப்படுவது தடுக்கவேண்டும்

## பான் கீ மூன் தெரிவிப்பு

(நியூயோர்க்)

ஈராக்கின் முக்கியமான கலாசார அடையாளங்களாக இருக்கும் இடங்களையும், தொல்லியல் பொருட்களையும், நினைவுச் சின்னங்களையும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அழிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். இதைத்தடுக்க வேண்டும் என ஐ.நா. தலைவர் பான் கீ மூன் உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நமது புராதன கலாசார இடங்களையும், சின்னங்களையும் அழிப்பது ஒரு போர்க் குற்றம். இதை செய்பவர்கள்



கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும்" என கோபத்துடன் தெரிவித்துள்ளார். மேலும் ஈராக்கில் செயல்பட்டு வரும் அமெரிக்காக் கூட்டுப்படை துரிதமாக செயல்பட்டு இதை தடுக்க வேண்டும். அதே போல் தொல்பொருள் கடத்தலையும் தடுக்க வேண்டும்" என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கு பதில் அளித்துள்ள அமெரிக்க கூட்டுப்படை கடந்த சனிக்கிழமை இரவு மட்டும் 12 முறை வான்வழி தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. அசீரியன் காலத்து நகரமான நிம்ருத் மற்றும் மோசூல் அருங்காட்சியகத்தை அழித்தபின் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் கவனம் 2200 ஆண்டுகள் பழமையான ஹாத்ரா நோக்கி திரும்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புற்று நோயை கண்டறியும் நாய்



(வோஷிங்டன்)

தற்போது தைராய்டு சுரப்பிகளில் ஏற்படும் புற்று நோயை மிக துல்லியமாக கண்டுபிடிக்க முடியாத நிலை உள்ளது. அதனால் தேவையற்ற அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

எனவே அதை தவிர்க்க மோப்ப நாய் மூலம் அமெரிக்க நிபுணர்கள் தைராய்டு புற்று நோயை கண்டு பிடித்துள்ளனர். சிறுநீரை மோப்பம் பிடித்து அவருக்கு தைராய்டு நோய் பாதித்துள்ளதா? என்பதை நாய் கண்டு பிடித்துள்ளது.

அதேநேரத்தில் தைராய்டு புற்று நோய் பாதிக்காத 88.2 சதவீதம் பேரையும் கண்டு பிடித்தது. பயிற்சி அளிக்கப்பட்ட மோப்ப நாயை பயன்படுத்தி இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளதாக பேராசிரியர் டொனால்ட் போ டென்னர் கூறியுள்ளார்.

# இந்திய பிரதமர் மோடி பாகிஸ்தான் வருவார்

## பாக்.பிரதமரின் ஆலோசகர் நம்பிக்கை



சார்க் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி அடுத்த ஆண்டு நிச்சயமாக பாகிஸ்தான் வருவார் என அந்நாட்டுப் பிரதமர் நவாஸ் ஷெரீபின் ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் கூறியுள்ளார்.

2016ஆம் ஆண்டுக்கான சார்க் உச்சி மாநாடு பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் அனைத்து உறுப்பு நாட்டுத் தலைவர்களும் பங்கேற்பார்கள் என்ற வகையில், மோடியும் கலந்து கொள்வார் என சர்தாஜ் கூறியுள்ளார்.

இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பின் ஆலோசனை நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் நடந்தது. அதில் கலந்து கொண்ட சர்தாஜ் அஜீஸ், செய்தியாளர்கள் சந்திப்பின்போது இதனை தெரிவித்தார்.

# இந்திய ஒருமைக்கும் பாதுகாப்பிற்கும் ஊறுவிளைவிப்பதை ஏற்க முடியாது

## பிரதமர் மோடி தெரிவிப்பு

ஜம்மு-காஷ்மீர் பிரிவினைவாத தலைவர் மஸ்ரத் ஆலம் விடுதலை தொடர்பாக மக்களவையில் விளக்கமளித்த பிரதமர் நரேந்திர மோடி, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும், பாதுகாப்புக்கும் ஊறு விளைவிக்கும் எந்த ஒரு செயலையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாது என்று தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

மேலும் அவர் கூறும்போது, "மஸ்ரத் ஆலம் விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக காஷ்மீர் அரசு மத்திய அரசுடன் கலந்தாலோசிக்கவில்லை. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் ஊறு விளைவிக்கும் எந்த ஒரு செயலையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாது. அவையில் உறுப்பினர்கள் எழுப்பும் கோபம் நாடு முழுவதும் எழுந்துள்ள அதிருப்தியின் அடையாளம்" என்றார்.

அப்போது குறுக்கிட்ட காங்கிரஸ் கட்சியின் மக்களவைத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, "பிரதமர் விளக்கம் ஏற்புடையதாக இல்லை. மஸ்ரத் ஆலம் விடுதலை குறித்து ஜம்மு-காஷ்மீர் அரசு நிச்சயமாக பிரதமருடன் ஆலோசித்திருக்கும்" என்றார்.

முன்னதாக பேசிய ராஜ்நாத் சிங், "பொதுமக்கள் பாதுகாப்



பில் அரசு ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது. மஸ்ரத் ஆலம் மீது கொலை, கொலைச் சதி உள்ளிட்ட 27 வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்நிலையில், அவர் விடுதலை தொடர்பாக ஜம்மு-காஷ்மீர் உள்துறை கூறும் விளக்கம் ஏற்புடையதாக இல்லை. ஜம்மு-காஷ்மீர் மாநில உள்துறைக்கு விளக்கம் கேட்டு மனு அனுப்பப்பட்டுள்ளது. தேவைப்பட்டால், ஜம்மு-காஷ்மீர் அரசுக்கும் எச்சரிக்கை விடுக்கப்படும்" என்றார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை பின்பற்றும் போகோஹறரம்

## நைஜீரிய அரசு தகவல்



ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தின் வழியில் பற்றுறுதி கொண்டுள்ளதாக போகோ ஹறம் தலைவர் அறிவித்தார் தொடரும் தாக்குதல்களால் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகவே, போகோ ஹறம் ஐ.எஸ்.ஐ.எஸ். வழியை பின்தொடர்வதாக அறிவித்துள்ளது என்று நைஜீரிய அரசாங்கம் கூறுகின்றது.

இஸ்லாமிய அரசு இயக்கத்தின் வழியில் பற்றுறுதி கொண்டுள்ளதாக போகோஹறரம் அறிவித்திருப்பது, அந்த இயக்கத்தி னர் நெருக்கடியை சந்தித்துவருவதையே காட்டுகின்றது என்று நைஜீரிய அரசாங்கம் கூறியுள்ளது.

நைஜீரிய மற்றும் பிராந்திய இராணுவப் படைகளின் தாக்குதல்களின் விளைவாக, போகோ ஹரம் ஆயுததாரிகள் தமது வல்லமைகளை இழந்து, கடுமையான சேதங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார். போகோஹறரமின் தலைவர் அபுபக்கர் ஷேக்காவ், கடந்த சனிக்கிழமை இணையத் தில் விடுத்துள்ள ஒலிச் செய்தியொன்றில், ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் வழியில் பற்றுறுதி கொண்டுள்ளதாக அறிவித்தார்.

நைஜீரிய அரசுக்கு எதிரான தங்களின் போராட்டத்திற்கு உதவிகோரும் முயற்சியே இந்த அறிவிப்பு என்று நைஜீரிய அரசாங்கத்தின் பேச்சாளர் கூறுகினறார்.

# செலவு மிகுந்த நகரம்...



பொருளாதார புலனாய்வு பிரிவு என்ற அமைப்பு, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, உலகிலேயே செலவு மிகுந்த நகரங்கள் குறித்து ஆய்வு நடாத்தி வருகிறது. அதுபோல், இந்த ஆண்டு 93 நாடுகளில், 140 நகரங்களில் இந்த ஆய்வு நடாத்தப்பட்டது. இதில், உலகிலேயே செலவு மிகுந்த நகரம் சிங்கப்பூர் என தெரியவந்துள்ளது.

பாரீஸ், ஒஸ்லோ, சூரிச், சிட்னி ஆகிய நகரங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. கடந்த முறை நடத்தப்பட்ட ஆய்விலும், இதே நகரங்கள் இதே இடங்களைப் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இது, மிகவும் அபூர்வமானதாக கருதப்படுகிறது.

சிங்கப்பூரில் உள்ள பலசரக்கு பொருட்கள் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ளதை விட 11 சதவீதம் அதிகமாகும். உடுபுடவைகள் 50 சதவீதம் அதிகமாகும். மேலும், சிங்கப்பூரில் கார் வைத்திருப்பதற்கு சான்றிதழ் பெறும் முறை உள்ளது. இதனால், அங்கு போக்குவரத்து செலவு, நியூயோர்க்கை விட மூன்று மடங்கு அதிகமாக போய்விட்டது. இந்த காரணங்களால், சிங்கப்பூர் முதலிடத்தை பெற்றுள்ளது.

# தீவிரவாதத்துக்கு மாணவர்கள் இணைய உதவினார் பெண்

## திடுக்கிடும் தகவல்

ஐ.எஸ்.ஐ.எஸ்.இல் இணைய சென்ற பிரித்தானிய மாணவிகளுக்கு உதவி புரிந்தவரை பற்றி தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானியாவை சேர்ந்த ஷாமினா பேகம்(15), கதீஜா சுல்தானா(16) மற்றும் அமீரா அப்பாஸி (15) என்ற 3 மாணவிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைய கடந்த மாதம் சிரியாவிற்கு சென்றுள்ளனர். துருக்கியின் இஸ்தான்புல் விமான நிலையத்தின் மூலம் சிரியாவின் உர்பா நகருக்கு இவர்கள் சென்றதாகக் கூறப்பட்டு வந்தது.

ஆனால் இவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தலைமையகமான சிரியாவின் ரக்கா(Raqqa) நகரில் வீடு ஒன்றில் வசித்து வருவதாக தற்போது தெரியவந்துள்ளது. மேலும் இவர்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இருந்த பிரித்தானிய பெண் ஒருவர் உதவியதாகவும், அதன் மூலமே இவர்கள் சிரியா செல்ல முடிந்ததாகவும் கூறப்படுகிறது.

தற்போது இவர்களுக்கு அடைகலம் தந்து வருவதும், அந்த



பெண் தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையே மாணவிகள் ஐ.எஸ்.ஐ.எஸ்.இல் இணையவிருப்பது குறித்து பொலிஸாருக்கு தெரிந்திருந்தும், அவர்கள் தங்களுக்கு பொய்யான தகவல்களை கூறியதாக மாணவிகளின் பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். எனவே பொலிஸார் தங்களது செயலுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# அரசியலில் இணைங்கிப்போனால் வாழ்வில் எதையும் பெறலாம்

## ஈ.பி.டி.பி.யின் யாழ். ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு



இணங்கிப் போவதனூடாகத் தான் நாம் எதனைவேண்டுமானாலும் பெற்றுக்கொள்ள முடியும். அத்தகைய அரசியல் நீரோட்டத்திற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்து கொண்டால்தான் எமது உரிமைப் பிரச்சினைகளுக்கான தேடலை நாம் உருவாக்கிக்கொள்ளமுடியும்.

இத்தகைய ஒரு இணக்கப்பாடான அரசியலையே செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா 1987 இல் இருந்து மேற்கொண்டு வருவதுடன் அனைத்து கட்சிகளையும் அதில் இணையுமாறும் பலவருடங்களாக வேண்டுகோள் விடுத்தும் வருகின்றார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி. குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் பகுதி கட்சியின் செயற்பாட்டாளர்கள் கூட்டம் மானிப்பாய் தொகுதி கட்சி அலுவலகத்தில் பிர்தேச அமைப்பாளர் ஜீவா தலைமையில் நடைபெற்றது. இதில்விசேட அதிதியாக ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு பிரதேச செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துரைக்கும்போதே ஒருங்கிணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது இலஙகையில் அரசியல் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒவ்வொரு செயற்பாடுகளும் விரைவில் வரவுள்ள பொதுத் தேர்தலை மையமாக வைத்துத்தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த பலவருடகாலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வரும் தமிழ் அரசியல்வாதிகள் பலரது சுய நலன்கள்தான் இன்று வரை எமது இனம் உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியாத இனமாக சின்னாபின்னமாக சிதறி வாழ வேண்டி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் தமிழருக்காக தரப்படவிருந்த பண்டா - செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம். சந்திரிக்கா கொண்டுவந்த தீர்வுத்திட்டம் என பலதரப்பட்ட தீர்வுகளை எல்லாம் தீராபிரச்சினைகளாக்கி வந்த தரப்பினர் தற்போது இலங்கை அரசுடன் ஒரு அரசியற் பங்காளிகளாக ஒட்டி உறவாடிக்கொண்டிருக்கின்றனர்.

ஆட்சியாளர்களுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கும் இவர்கள் இன்றுவரை தமிழர் உரிமைப்பிரச்சினை விடயங்களை தீர்ப்பதற்கான வழிவகைகளை வலியுறுத்தி தென்னிலங்கை அரசுடன் பேச்சுக்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

தமிழ் மக்களது பிரச்சினைகளையோ அவர்களது அபிவிருத்திகளையோ விரும்பாத இந்த கூட்டமைப்பினர் மக்களை ஏமாற்றுவதற்காகத்தான் உரிமை விடயங்களை வைத்து மக்களை தவறான வழிகளில் திசைதிருப்பி வருகின்றனர். இந்த உண்மையான நிலைமையை வடபுலத்து மக்கள் விளங்கிக்கொள்ளாது இருப்பதும் தமிழர் இனப்பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது.

எனவே விரைவில் வரவுள்ள அரசியல் தேர்தல் களத்தில் தமிழர் நலன்களை முன்னிறுத்தி வரும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை தமிழர் தலைமையை நிர்ணயிக்கும் அதிகாரம் கொண்டவராக உருவாக்க மக்கள் தீர்ப்புக்கள் அமைய வேண்டும் என்பதையே மக்கள் மீது அக்கறைகொண்ட பலரும் விரும்புகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் ஜீவா மற்றும் வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# அரசியல் கைதிகள் விடுதலை ஜனாதிபதிக்கு கருணை மனு

(கொழும்பு)

நெடுங்கால சிறைவாசத்தை அனுபவித்துவரும் நாம் பட்டறிவுகளைப் பாடமாகக்கொண்டு இனிவரும் நாட்களை இனிய நாட்களாக எதிர்கொள்ள திடசங்கற்பம் பூண்டுள்ளோம். எனவே எம்மையும் இந்த நாட்டுப் பிரஜைகளாகக் கருதி, விடுதலைசெய்ய அமைதியும் சாந்தமும் கொண்ட இலங்கை நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் தமிழ் அரசியல் கைதிகள்.

இதுகுறித்து அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

கடந்த மூன்றரை தசாப்தகால உள்நாட்டுப் போர்ச்சூழலால் அவசரகால, பயங்கரவாத தடைச்சட்டங்களின் கீழ் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சந்தேகத்தின் பெயரால் கைது செய்யப்பட்டு மிக நீண்ட காலமாக நாம் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளோம். சூழ்நிலைக் கைதிகளான எம்மில் இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோர் அடங்கலாக 320 பேர் வரை இலங்கையிலுள்ள பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளோம்.

குற்றமிழைத்த ஒவ்வொருவருக்கும் வழங்கக்கூடிய தண்டனைக்காலத்திற்கும் மேலதிகமாக நாம் தண்டனையை அனுபவித்து வருகிறோம். எமது வாழ்க்கையின் அரைவாசிக்கும் அதிகமான காலத்தை சிறைக்கூண்டுக்குள் தொலைத்திருக்கும் நிலையில், எமது குடும்பத்தவர்களும் இன்னோரன்ன துன்பங்களைச் சுமந்து வருகின்றனர்.

எம்மை விடுவிப்பதற்காக அவர்கள் நாளும் பொழுதும் அலைந்து பணத்தைச் செலவிட்டு வறுமைக்கோட்டுக்குக் கீழ்ப்பட்டவர்களாக மாறிவிட்டனர். சாதாரண மனித வாழ்வின் இயல்புத்தன்மையை இழந்துவிடும் நிலையில் நான்கு சுவர் சூழ்ந்த கூண்டுக்குள் நாம் முடக்கப்பட்டுள்ளோம்.

எனவே நாட்டின் தலைமகனாகிய தங்களுக்கு இருக்கக்கூடிய சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி எமக்கு பொது மன்னிப்பு வழங்கி, சீரழிந்துகொண்டிருக்கும் ஒருதொகுதி மக்கள் சமூகத்தைத் தூக்கி நிறுத்துமாறு நாம் கருணைக்கரம் நீட்டுகிறோம்.

முன்னாள் போராளிகளைச் சமூகத்துடன் இணைத்து அவர்களுக்கும் வாழ சந்தர்ப்பம் வழங்கியது போன்று எமக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு கோருகிறோம். இன்று முழு நாடும் அபிவிருத்தியையும் சமாதானத்தையும் சுகவாழ்வையும் அனுபவித்துவரும் நிலையில், எமது மனங்கள் விரக்தியையும், ஏமாற்றத்தையுமே உணர்கின்றன.

எமது விடுதலையின் நியாயத்தை சிங்கள மக்களும் ஏற்றுக்கொண்டிருக்கும் இந்தச் சூழலில் ஜனாதிபதியாகிய தாங்கள் நல்லதொரு முடிவை எடுப்பீர்கள் என்று நம்புகிறோம் என்றுள்ளது.

இந்த மனுவின் பிரதிகள் பிரதமர், பிரதம நீதியரசர், தேசிய நிறைவேற்றுச் சபை, சட்டமா அதிபர், நீதியமைச்சர், சட்டம் ஒழுங்குகள் அமைச்சர், வடக்கு முதலமைச்சர் உட்பட 12 பேருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## கோத்தா...

வேண்டுகோளையடுத்தே நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

காலி பிரதான நீதவான் நிலுபீலி லங்காபுர முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

## தடையை...

வர்த்தகக் குழுவின் உப தலைவர் ஜன் ஷஹ்ராடில் கடந்த வாரம் இலங்கை வந்திருந்தார். மீன்கள் ஏற்றுமதி குறித்து விசேடமாக ஆராய்ந்த அவர் தடையை நீக்கப் பரிந்துரை செய்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பொன்சேகாவின்...

நீதிமன்றத்தால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் விஜித் மலல்கொட மற்றும் ஏ.ஜீ.சி மடவல ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்தக் கோரிக்கை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிசீலனையைத் தொடர்ந்து, மனு மீதான விசாரணை மே மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இந்திய....

விரும்புகின்றோம், இரு நாடுகளின் தலைவர்கள் மத்தியில் குறுகிய காலப்பகுதியில் நடைபெறப் போகின்ற நான்காவது விஜயம் இதுவாகும், இது பல விடயங்களை புலப்படுத்துகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வர்த்தகத்தின் அளவு 5.2 பில்லியன் டொலர்.

இலங்கையில் மேலும் முதலீடுகளை மேற்கொள்வது, வேலை வாய்ப்பினை உருவாக்குவது ஆகியனவே மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளாகும்.

இரு நாடுகளுக்கும் இடையில் போக்குவரத்தை இலகுவாக்க விரும்புகின்றோம். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் பிரதமர் மோடி இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்தியாவால் கட்டப்பட்ட வீடுகளை கையளிப்பார். நாங்கள் 27000 வீடுகளை கட்டியுள்ளோம் அவற்றையே பிரதமர் கையளிப்பார் என ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

## மைத்திரியை...

லண்டன் சென்றுள்ளார். இவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்வதற்கு முக்கிய காரணியாக அமைந்தது தமிழ் மக்களுடைய வாக்குகள். தமிழ் மக்கள் ஆட்சி மாற்றம் ஏற்படவேண்டும் என்று பெருந்தொகையாகச் சென்று வாக்களித்ததால்தான் ஜனாதிபதியின் வெற்றி உறுதிசெய்யப்பட்டது.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கிய பெருமை தமிழ்மக்களையே சாரும்.

அப்படிப்பட்ட ஒருவர் 2 மாதகாலத்திற்குள்ளேயே வெளிநாட்டுக்குச் செல்கின்றபோது அந்த நாடுகளில் இருக்கின்ற தமிழர்கள், வாக்களித்த மக்களின் எண்ணக்கருவுக்கு பங்கம் இல்லாமல் நடந்துகொள்வது நல்லது.

தமிழ்மக்களுடைய தீர்வுகளுக்கு இலங்கை அரசாங்கம் மதிப்புக் கொடுப்பதில்லை என்பது எங்களது குற்றச்சாட்டு. அதே குற்றச்சாட்டுக்கு எங்களுடைய வருங்கால சந்ததி ஆளாகக்கூடாது. எனவே வாக்களித்துள்ள மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலாவது வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்றார்.

## மாந்தையில்...

நிறுத்திவைக்கும் படியும் கேட்டுக்கொண்டனர். இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட மக்கள் மார்ச் 25 ஆம் திகதி வரை காத்திருப்பதாகக் கூறியுதுடன் 25 ஆம் திகதி எமது காணிகளில் குடியேற அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் தெரிவித்தனர்.

1960 ஆம் ஆண்டு இப்பகுதியில் குடியேறிய மக்கள் 1990 ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து சென்றிருந்தனர். யுத்தம் நிறைவுபெற்று 2010 ஆம் ஆண்டு அப்பகுதிக்கு மீள்குடியேற வந்தபோது, தொல்பொருள் வலயம் என தெரிவித்து தம்மை மீளக்குடியமர அனுமதிக்கவில்லை என்று குறித்த காணிகளுக்குரிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

## ஆசிரியர்கள்...

நிலையில் கடந்த மாதங்களில் தமக்கான இடமாற்றத்தினை வழங்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு கடந்த முதலாம் திகதியன்று இடமாற்றம் வழங்குவதாக உறுதியளித்திருந்தது. இதற்கமைய ஆசிரியர்கள் தமது இடமாற்றக் கடிதத்தைக் கோரிய போதிலும் பின்னர்வேறு ஒரு தினத்தில் வழங்குவதாக தெரிவித்தனர். இதே போன்று மூன்று தடவைகள் ஏமாற்றி நேற்று 9 ஆம் திகதி வருமாறும் தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய நேற்றையதினம் ஆசிரியர்கள் அனைவரும் வந்திருந்த போதும் அலுவலகத்தில் பொறுப்பு வாய்ந்த யாருமே இல்லாத நிலை இருந்தது. இருந்தும் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை நாங்கள் அலுவலகத்திலேயே நின்றிருந்த போதும் யாருமே எம்மைக் கண்டு கொள்வதாகவோ எமக்குரிய பதிலைக் கூறுவதாகவோ தெரியவில்லை.

இதனையடுத்து ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தைப் பூட்டினர். இதன் பின்னர் அங்கு உடனடியாக கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் வருகை தந்தார். ஆயினும் இதன் போது எமக்குரிய எந்தவித பதில்களையும் வழங்கவில்லை.

இதனையடுத்து நாம் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தோம். இதன் பின்னர் சிறிது நேரத்தில் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வருகை தந்தார். இதனையடுத்து அமைச்சர் தலைமையில் மாகாணத்தின் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையில் விசேட கலந்துரையாடலொன்று நீண்ட நேரமாக நடைபெற்றது.

இதன் போது பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்தின் நுழை வாயிலை மறித்து பூட்டியிருந்தனர். இதனால் அங்கிருந்து உள்ளேயோ அல்லது அதற்கு வெளியேயோ வாகனங்கள் ஏதும் செல்ல முடியவில்லை. இரவு எட்டு மணிவரை கதவு பூட்டி மறித்திருந்ததால் அங்கு பெரும் களேபரமே ஏற்பட்டது. இதன் போது மாகாணக் கல்வி அமைச்சருக்கும் மாகாண சபைக்கும் எதிராக ஆசிரியர்கள் கோசம் எழுப்பியதுடன் பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தனர்.

இவ்வாறான நிலையில் இதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாகவும், ஆகவே போராட்டத்தைக் கைவிடுமாறும் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கோரியிருந்தார். ஆயினும் இதற்கு ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தினை தொடர்ந்து மேற்கொண்டனர்.

இதன் பின்னர் மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலரும் வந்து ஆசிரியர்களுடன் பேசியிருந்தனர். ஆயினும் இதன் போதும் எந்தவித முடிவுகளும் எடுக்கப்படாத நிலையில் வாயிலை முடியதான போராட்டம் தொடர்ந்தது. பின்னர் இறுதிநேர சமரச முயற்சி ஒன்றின் பயனாக இடமாற்றக் கடிதங்கள் இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படும் என்ற உறுதிமொழியைத் தொடர்ந்து முற்றுகைப் போரா்ட்டம் முடிவுக்கு வந்தது. (25,12)

## வீரவன்சவிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவனசவிடம் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நேற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

சொத்துக்கள் மற்றும் ஊழல்கள் குறித்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் முன்னாள் அமைச்சரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுவதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வாக்குமூலமளிப்பதற்காக சமுகமளிக்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு அமைய விமல் வீரவன்ச நேற்று முற்பகல் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முன்னிலையில் ஆஜரானார்.

இதேவேளை, ஊவா மாகாண முதலமைச்சர் ஹரீன் பெர்ணாந்து மற்றும் அவரின் அமைச்சரவையை நீக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஊவா மாகாண முன்னாள் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்கவினால் இந்த மனுத் தாக்கல செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு தொடர்பில் கருத்துக்களை தெரிவிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்கள் கால அவகாசம் கேட்டுள்ளனர்.

ஹரீன் பெர்ணாந்து முதலமைச்சராக நியமிக்கப்பட்டமை சட்டவிரோமானது எனவும், சட்ட விரோதமான ஒருவரால் மாகாண அமைச்சரவையை நியமிக்க முடியாது எனவும் குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் சேவையையும் பிரதேச அபிவிருத்தியையும் விடாமல் என்றும் தொடர்வோம்



மக்கள் சேவையை மட்டுமன்றி பிரதேச அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு அனைவரும் உண்மையுடனும் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கட்சியின் பிரதேச அமைப்பாளர்களுடனான கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று தேசிய நிறைவேற்றுச் சபையிலும் அங்கம் வகித்து வரும் நிலையிலும் இச் சூழலை நன்கு பயன்படுத்தி மக்களுக்கான அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால், மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு கூட்டமைப்பினர் எவ்விதமான அக்கறையும் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே இந்நிலையில் அவர்களது விருப்பம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதை விடுத்து தீராப் பிரச்சினையாக வைத்துக் கொள்வதையும் அதனூடாக தமது சுயலாப அரசியலையும் முன்னெடுப்பதையும் நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நாம் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்பதை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வரும் நிலையில் கட்சி அமைப்பாளர்கள் மக்கள் சேவைகளை மட்டுமன்றி பிரதேச அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு அனைவரும் உண்மையுடனும் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டுமெனவும் இதனூடாகவே மக்கள்சேவையை முழுமைப்படுத்த முடியுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்தகால, நிகழ்கால அனுபவங்களை கவனத்தில் கொண்டு எதிர்காலத்தை நம்பிக்கையுடன் முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டியது அவசியமானது எனவும் சுட்டிக்காட்டினார்.

## கைப்பணிக் கண்காட்சி

(வேலணை)

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினது அனுசரணையுடன் வேலணைப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் இணைந்து நடாத்தும் தையல் மற்றும் கைப்பணிக் கண்காட்சி ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் வேலணை துறையூர் ஐயனார் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் நடைபெறவிருக்கின்ற இந்த விழாவில் வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே. பெலீசியல் பிரதம விருந்தினராகவும் வேலணைப் பிரதேச செயலக கணக்காளர் இ. றமணன், மாவட்ட செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. பரராசசேகரம், வேலணைப் பிரதேச சபையினது தவிசாளர் சி. சிவராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், தீவகக் கல்வி வலயப் பணிப்பாளர் தி. ஜோன்ஸ் குயின்ராஸ், கிராம சேவை அலுவலர் இ. குலசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (05, 02)

# காலிறுதியில் பங்களாதேஷ்; இங்கிலாந்து வெளியேற்றம்

(அடிலெய்ட்)

பங்களாதேஷ் அணிக்கெதிரான லீக் போட்டியில் 15 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிய இங்கிலாந்து அணி உலகக் கிண்ண தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதுடன் பங்களாதேஷ் அணி காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது.

முக்கியமான லீக் ஆட்டமொன்று நேற்று அவுஸ்ரேலியாவின் அடிலெய்ட்டில் நடைபெற்றது. இதில் ஏ பிரிவில் இடம் பிடித்த பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி முதல் நான்கு விக்கெட்டுக்களையும் 99 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்குள் பறிகொடுத்தது. ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த மொகதுல்லா, எம். றஹீம் இணை பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது. சிறப்பாக ஆடிய மொகமதுல்லா சதம் விளாசியதுடன் உலகக் கிண்ண வரலாற்றில் முதல் சதமடித்த பங்களாதேஷ் வீரர் என்ற சிறப்பையும் பெற்றுக் கொண்டார். இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 139 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுவேளை பிரிகப்பட்டது. இறுதியில் பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமதுல்லா138 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 103, எம். றஹீம் 77 ப்ந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 89, சக்கார் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன், ஜேர்டன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு 276 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்த வண்ணமிருந்தது. பட்லர், வோக்ஸ் ஆகியோர் நம்பிக்கை அளிக்கும் வகையில் ஆடிய போதிலும் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. நிறைவில் இங்கிலாந்து அணி 48.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியதுடன் உலகக் கிண்ண தொடரிலிருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளது. துடுப்பாட்டத்தில் இயன் பெல் 63, பட்லர் 65, வேர்க்ஸ் ஆட்டமிழக்காது 42, ரூத் 29, அலெக்ஸ் ஹேல்ஸ் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆர். உசைன் நான்கு, ஐ. அகமட் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக மொகமதுல்லா தெரிவு செய்யப்பட்டார். இவ் வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

# 10 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் வடக்கில் கொள்வனவு செய்யப்படும்

## நெல் சந்தைப்படுத்தல் சபை பிராந்திய முகாமையாளர்

வடமாகாணத்தில் இதுவரையில் 2463.077 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய முகாமையாளர் டபிள்யு.ஆர்.ஏ.சாந்த குமார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வடமாகாணத்தில் 10 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்ய முடியும். ஒரு விவசாயியிடம் இருந்து 2 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்படும்.

வடமாகாணத்தில் சிவப்பு நாடு, வெள்ளை நாடு என்ற வகை நெல் ஒரு கிலோகிராம் 45 ரூபாயாகவும் சம்பா கிலோ 50 ரூபாய் ஆகவும் கொள்வனவு செய்யப்படுகின்றது.

நெல் விற்பனை செய்யும் விவசாயிகள் பிரதேச செயலகங்களின் ஊடாக விண்ணப்பப் படிவத்தை பெற்று, அதனைப் பூர்த்தி செய்து மாவட்ட செயலாளரிடம் உறுதிப்படுத்தி நெல் மாதிரியையும் கமநல சேவை நிலையத்தின் ஊடாக தரும் பட்சத்தில் அவர்களிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்படும்.

யாழ். மாவட்டத்தில் புத்தூர், கொடிகாமம் கமநல சேவை நிலையங்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யப்படுவதாகவும் இதுவரை யாழ். மாவட்டத்தில் இருந்து 197.024 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## முகத்தை மூடும் கவசம் அணியலாம்

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை தற்காலிகமாக நீக்குவதற்கு தீர்மானித்திருப்பதாக பொது அமைதி, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். அது தொடர்பில் கருத்துக்களை வழங்குவதற்கு மக்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டதை தொடர்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவத்தார்.

## நீலப் படையணி விவகாரம்; விசாரணை நடாத்த ஏற்பாடு

நீலப்படை அணியில் உறுப்புரிமையை பெற்ற இளைஞர்களுக்கு மட்டுமே கடந்த அரசாங்கத்தில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டதாக ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கடந்த ஆட்சியின்போது தொழில் தேடி சென்ற இளைஞர்கள் தொழில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றால் முதலில் நீலப்படை அணியில் இணையுமாறு வற்புறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

எனவே இது குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்படுமா என நேற்று நாடாளுமன்றத்தில் அனுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, கடந்த ஆட்சியில் முறையான தொழில்வாய்ப்பு அளிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. தொழில் தகைமை இருந்தாலும் தகைமை குறைவான தெரிவு செய்யப்பட்ட சிலருக்கே தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் தொழில் வாய்ப்பை விற்பனை செய்து நீலப்படை அணிக்கு ஆட்சேர்த்தலில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நிதியமைச்சர் இதன்போது உறுதியளித்தார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.